உதயம்

நிறுவியவர் :

**கன்னிக்கண்ணன்**

ஆசிரியை :

**சகுந்தலா கிருஷ்ணன்**

| ஒளி-10 | ஜூன் — 1964 | கதிர்-2 |
| --- | --- | --- |

காங்கிரசின் பகைவர்கள்!
(தலையங்கம்)— 1

விலைவாசி விடுக்கும் எச்சரிக்கை!
கிழக்கு வங்கத்தில் இடம் வேண்டும்!
(அக்கம்பக்கம்)— 3

பஞ்சாமிர்தம் — 6

என்று காண்போம்!
(அட்டைப்படக் கவிதை) — 8

தங்கப் பதுமை
(வே. சு. சண்முக வடிவேலு) — 9

உதயம் (தூ. ப. ரகுபதி)— 15

தாயும் தாய்மையும்
("காதம்பரி")— 16

உபாசிக விஹாரம்
('ஷேரலி'— 19

அனிச்சப்பூ (எழில் முதல்வன்) 21

'உதயத்'தில் வெளியாகும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே. எவரையும் குறிப்பிடுவன அல்ல.

# காங்கிரசின் பகைவர்கள்!

காங்கிரசுக்கு இன்று வெளி எதிரிகள் யாரும் இல்லை. காங்கிரஸ் கொள்கைக்கு மாறான பெரிய இலட்சியங்கள் இன்று யாரிடமும் கிடையாது இந்தக் கொள்கையை மீறும்படியான உயர்ந்தகொள்கைகளும் காணோம். வெகுளித்தனமோ, வெறும் பரபரப்போ காட்டாமல், அமைதியாக அடக்கமாக, ஆனால் உறுதியாக மக்களின் அன்பையும் ஆதரவையும் தொடர்ந்து பெற்று வரும் கட்சியும் காங்கிரஸ் ஒன்று தான். காங்கிரசின் பலம் இன்னும் யானைப் பலம் தான். இன்னும் பல காலத்துக்கு இந்த நிலைமை நீடிக்கும். ஆனால் ஒன்று.

நண்டு, சிப்பி, கதலி ஆகியவைகளுக்கு கொண்ட கருவே எமனாக அமையுமாம். அதே போல அந்தப் பட்டியலில் காங்கிரஸ் சேர்ந்துவிடக்கூடாது என்பதுதான் நம் கவலை. காங்கிரசில் இன்று ஒரு புதிய புல்லுருவிக் கூட்டம் உற்பத்தியாகியிருக்கிறது. மேல் தோற்றத்தில் இவர்கள் காங்கிரஸ்காரர்கள். பாவனை நடிப்பு எல்லாம் அப்படி. டீக்காக கதர் உடுப்பு அணிந்து கொண்டு, தலைவர்களும் மந்திரிகளும் வரும் போது அவர்களை சக்கரவட்டமாகச் சுற்றி வருவதும், கார் கதவைத் திறந்து பவ்யம் காட்டுவதும், தலைவர்களுக்கு விழும் மாலைகளை வாங்கி புறங்கையில் தொங்க விட்டுக் கொள்வதும், புன்னகையும், செயற்கைப் பரபரப்புமாகக் காட்சியளிப்பதும்தான் உண்மையான காங்கிரஸ் சேவை என்றால், இவர்கள், இந்தப் புதியவர்கள் காங்கிரஸ்வாதிகள்தான்.

ஆனால் இந்தப் பூனைக் கோலங்கள் எல்லாம் யாருக்கு வேண்டும்? மேரு மலை போல வளர்ந்து, உலகம் அளாவிய சாதனைகள் புரிந்துள்ள காங்கிரசுக்கு இந்தப் போலி பக்தர்களின் வழிபாடு தேவையே இல்லை.

காங்கிரஸ் கொள்கையில் நாட்டமிருந்து, மக்களுக்கு உண்மையாக உருப்படியான உதவி செய்ய வேண்டும் என்று எண்ணமிருந்து, அதற்காகப் பணியாற்ற விரும்புகிறவர்கள்தான் காங்கிரசுக்குத் தேவையே தவிர ஆஷாடபூதிகளுக்கு இங்கு அவசியமே இல்லை. இது என்ன டிராமா கட்சியா, அல்லது சினிமா கட்சியா இத்தகைய வேஷதாரிகளை வேண்டுவதற்கு?

தங்கள் சொந்த வேலைகளைப் பார்த்துக் கொண்டு, பிறருக்குப் பாரமில்லாமல், பொதுப் பணியாற்ற முற்படுபவர்களுக்கு காங்கிரசில் சிறப்பான வருங்காலம் இருக்கிறது. அவர்கள் எந்த மேம்பட்ட பதவிக்கும் வரலாம். இதுதான் நடப்பு நியதி.

இந்த நியதி நல்லபடி நடந்து வரும் என்ற நம்பிக்கையை காங்கிரஸ் தலைவர்களும் ஏற்படுத்த வேண்டும். உண்மைத் தொண்டர்கள் யார், போலிகள் யார் என்பதை இனம் கண்டு பாகுபடுத்தி ஒதுக்கவேண்டியவர்களை ஒதுக்க வேண்டும். வருகிறவர்கள் எல்லாம் வரட்டும் என்ற போக்கில் போனால், போலிகள் பெருத்து, உண்மைத் தொண்டர்கள் மனம் கசந்து ஒதுங்கி நின்றுவிடக்கூடிய நிலைமை ஏற்படும். தலைவர்கள், அமைச்சர்கள் இதைக் கவனிப்பார்களா?

## உதயம் சந்தா விபரம்

சிறப்பு மலர்கள் உள்பட 'உதயம்' ஓராண்டு சந்தா **ரூபாய் ஐந்து.** 'உதயம்' உங்கள் இல்லம் தேடிவர இன்றே ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

விபரங்களுக்கு
நிர்வாகி, "உதயம்"
சென்னை-2



இந்தியன் பாங்க் லிமிடெட்டின் திறமை மிக்க அதிகாரிகளில் ஒருவரும், 'உதய'த்தின் அன்புக்கும் மதிப்பிற்கும் உரியவருமான திரு. என். ராமகிருஷ்ணன், பி. ஏ. பி. எல். அவர்கள் சென்ற மாதம் 13-ம் தேதி சென்னையிலிருந்து லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். வெளிநாட்டு பாங்குகள் இயங்கும் விதம், வர்த்தக முறை போன்ற பாங்கி வர்த்தகம் சம்பந்தமான நூதன வழி வகைகளிலும், செயல் முறைகளிலும் பயிற்சியும் அனுபவமும் பெற்று வருவதற்காக இந்தியன் பாங்க் நிறுவனத்தார் லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் பாங்கியிலும், மேற்கு ஜெர்மனியில் ஹாம்பர்க்கிலுள்ள டூஷே பாங்கியிலும் பயிற்சி பெறுவதற்கென மேல்நாட்டுக்கு அனுப்பிவைத்த இருவரில் திரு. ராமகிருஷ்ணன் அவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேல்நாடுகளில் தங்கியிருக்கும் ஓராண்டு காலத்தில் திரு. ராமகிருஷ்ணன் அவர்கள் பாங்கி வர்த்தக முறையில் சிறந்த தேர்ச்சியும், அனுபவமும் பெற்று திரும்புவதோடு இந்திய நாட்டுச் சிறப்பையும் பெருமையையும் தமது மேனாட்டு நண்பர்களுக்கு எடுத்துக் கூறி நம் நாட்டுக்கு நன்மதிப்பையும் பெற்று வருவார் என்று நம்புகிறோம். அன்னார் வெற்றியோடு தாயகம் திரும்பி வர 'உதயம்' பிரார்த்திப்பதோடு, 'உதய'த்தின் அன்பும் ஆசியும் துணை நிற்கும் என்றும் உறுதி கூறுகிறோம்.

# அக்கம் பக்கம்

## விலைவாசி விடுக்கும் எச்சரிக்கை!

இந்த ஆண்டுக் கோடையில் என்றுமில்லாத வெய்யில்; இதே ஆண்டில்தான் பொருள்களின் விலைவாசி என்றுமில்லாத உச்சத்தைக் கண்டிருக்கிறது. அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மக்கள் இன்று படுவது போன்ற அவதி முன்பு எப்போதுமே பட்டதில்லை.

விலைவாசி ஏற்றம் குறித்து எல்லா மக்களுமே கூப்பாடு போட்டார்கள். சர்க்கார் ஊழியர்களும் கூப்பாடு போட்டார்கள். சர்க்கார் ஊழியர்களுக்கு அரசாங்கம் இப்போது அகவிலைப்படியை ரூ 2 முதல் ரூ 10 வரை உயர்த்திக்கொடுக்க முன் வந்திருக்கிறது.

இந்த உயர்வினால் யாருக்கும் எந்தப் பலனும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்த 2 ரூபாயும் 10 ரூபாயும் ஒரு பொருளின் விலை ஏற்றத்தைக் கூட ஈடுகட்டப் போதாது. ஆனால் வியாபாரிகளோ, இறற்குள்ளாக ஹோட்டல் காபி, பலகாரம், சாப்பாட்டிலிருந்து, கால் செருப்பு வரை எல்லா பண்டங்களின் விலையையும் ஏற்றி விட்டார்கள். இந்தக் கூடுதல் அகவிலைப்படி கைக்கு வந்து கிடைப்பதற்கு முன்னதாகவே, ஏறிய விலைவாசி, அந்த உயர்ந்த நிலையில் ஸ்திரப்பட்டும் விட்டது. ஆகக்கூடி, அகவிலைப்படி உயரும் என்ற அறிவிப்பால், வியாபாரிகள் லாபமடைந்தார்களே தவிர, அரசாங்க ஊழியர்கள் நிவாரணம் பெறவில்லை.

விலை ஏற்றிய அவர்கள் சர்க்கார் ஊழியர்களுக்கு மட்டுமா ஏற்றினார்கள். எல்லாருக்குத்தான் ஏற்றினார்கள். அரசாங்கத்தின் 'அலவன்சு அதிகரிப்பு' அறிவிப்பானது பொருள்களின் விலை உயர்த்தியதுதான் கண்கண்ட பலனாக இருக்கிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் அவசியம்தான். ஆனால் அரசாங்கம் அதற்கு வேறு வழிகளைக் கையாளலாம். உதாரணமாக, இப்போது நியாய விலை அரிசி என்று போடுகிறார்கள் அல்லவா, அந்த அரிசியை எல்லாருக்கும் தேவையான அளவு நியாய விலையில் கொடுத்தாலும் போதும். மாதா மாதம் அதை ஒழுங்காக வழங்கி வந்தாலே போதும். ஊழியர்களுக்கு எவ்வளவோ கஷ்டம் குறையும்.

நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களின் பயனாக, எவ்வளவோ நல்ல வேலைகள் நடந்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அதே சமயத்தில் மக்களின் கஷ்டங்களும் அதிகரித்துள்ளன. அபிவிருத்தித் திட்டப் பலன்கள், சராசரி சாமானியப் பொது மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான் யார்த்தமான நிலைமை ஆகும். திட்டத்தால் வந்த லாபங்கள், வியாபாரிகளுக்கும் செல்வந்தர்களுக்கும் கிடைத்ததே தவிர, பொது மக்களுக்கு அவ்வளவாகக் கிடைக்கவில்லை. பொது மக்களுக்கு உழைக்க வாய்ப்பு அதிகரித்திருக்கிறது என்ற ஒன்றுதான், திட்டவேலையில் உருப்படியான அம்சமாக இருந்து வருகிறது.

இந்த நிலைமை மாறவேண்டும். விலைவாசியேற்றம் பொது மக்களைத் தொடர்ந்து வாட்டும்படி இனியும் விடலாகாது. இதைக் குறித்து நாட்டின் சராசரியான பொது மக்கள் அதை ஆதரித்து ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். அரசாங்கம் தன் கடமையை மேற்கொள்ள வேண்டியதே பாக்கி. அந்த முக்கிய வேலையை அரசாங்கம் விரைவில் மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு காங்கிரஸ் மேல் நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும், வளர்க்க வேண்டும். இல்லையேல் நிலை தடுமாறிய மக்கள், அடுத்த பொதுத் தேர்தலில் ஏதா

வது கவனப் பிசகாக நடந்து கொள்ளக்கூடும் என்று முன் கூட்டி எச்சரிப்பது நமது கடமை ஆகிறது.

ஊதுகிற சங்கை ஊதி வைத்து விட்டோம்.

## கிழக்கு வங்கத்தில் இடம் வேண்டும்!

காஷ்மீரத்தின் சிங்கம் என்று விளம்பரம் பெற்ற தலைவர் ஷேக் அப்துல்லாவின் எண்ணங்களையும் முயற்சிகளையும் பற்றி இப்போது மேற்கொண்டு தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இந்தியா-பாக்கிஸ்தான் தகராறுகள் பற்றியும், இருநாடுகளில் உள்ள மைனாரிட்டிகளின் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காணபது பற்றியும் அதன் பின்விளைவாக காஷமீர் சிக்கலுக்குத் தீர்வு ஏற்படும் என்றும ஷேக் அப்துல்லா, நமது அருமைப் பிரதமர் நேருஜியிடம் பேசினாராம்.

இந்தியா-பாகிஸ்தான் உறவில் இணைப்புப் பாலமாக விளஙக வேண்டும என்ற அளவுக்கு ஷேக் அப்துல்லா வளர்ச்சியடைய ஆசைபபடுவாரானல், மற்றவர்களுககு அதனல தீங்கு இல்லாத வரையில அவா ஆசையைப் பற்றி யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனல் ஷேக் அபதுல்லாவின் பேச்சிலும், போக்கிலும, ஒவ்வொரு செயலிலும ஏதோ ஒரு மாமம் தெனபடுகிறது. அவருடைய பதில்கள், சிக்கலைத் தீாபபதற்குப் பதிலாக மேலும் புதிர்களை ஏற்படுத்துவனவாக உள்ளன. நீங்கள் இந்தியக் குடிமகனா, இல்லையா? என்ற கேள்விக்குக் கூட அவர் நேரடியான பதில் சொல்ல மறுககிறார்.

இந்தியா பாகிஸ்தான் இரண்டுக்குமிடையே இரண்டின் பிரச்சனைகளுககு மிடையே காஷ்மீரமும் தானும் balance of power ஆக, அதாவது அதிகார வலிமை துலாக்கோலாக விளங்கி இரண்டு பக்கங்களிலும் இருநது லாபமடைய ஷேக் அப்துல்லா விரும்கிறாரா என்ற கேளவி சிநதனைக்குரியதாகும். பொதுவாக் ஷேக் அப்துல்லாவின் போக்கு பொறுப்புள்ள இநதியக் குடிமக்களின் சாயலிலும் இல்லை. இநதியாவுக்கு நட்பைக் காட்டும் படியான ரீதியிலும் இலலை. இந்தியாவிடமிருந்து முடிந்ததை பறிககவும், முயலககூடிய ஒரு முறையில்தான் ஷேக் அப்துலலாவின் நடமாட்டம அமைந்துள்ளது.

அதே சமயததில் ஷேக் அப்துல்லாவின் விடுதலைபற்றி ஆயாசப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தியாவுக்கு விரோதமாக அவர் புதியதாக எதுவும் செய்ய முடியாது.

பிரத்யட்ச நோக்குடன் நிலைமையைப் பார்க்கிறவர்கள் ஒரு காரியத்தைச் சொல்லுகிறார்கள். அதாவது சீனா, பாகிஸ்தான் இரண்டையும் ஒரே சமயத்தில் பகைத்துக் கொள்வது எப்படி? எனவே எப்படியும் பாகிஸ்தானுடன் சமரசம் கொள்ள வேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

அந்த வழியில் நின்று பரிகாரம் காணபதாயிருந்தால், அதற்குப் பழைய கசப்பான வழி தவிர வேறு பரிகாரமே இல்லை அதாவது காஷ்மீரத்தைப் பிரித்து இரண்டு பகுதிகளையும் இரண்டு நாடுகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்தப் பரிகாரம் முறை அல்ல என்றால், இந்தியப் பகுதியாகிய காஷ்மீரத்தைக் காக்க இந்தியா தன் படைபல வலிமையை மேலும் பெருக்க வேண்டும். அது தவிர வேறு வழி இல்லை.

மைனாரிட்டிகள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண இப்போது இந்து மகா சபைத் தலைவர் ஒரு புது யோசனை சொல்லியிருக்கிறார். மைனாரிட்டி பிரச்னையைத் தீாபபதில் ஷேக் அபதுல்லாவுக்கு உள்ள ஆர்வமும உரிமையும் இநது மகாசபை தலைவருக்கு இல்லை என்று சொல்லிவிட முடியாது. பாகிஸ்தான் தொடர்ந்து இந்துக்களை வெளியேற்றிக் கொண்டிருந்தால், கிழக்கு பாகிஸ்தானை இந்தியப் பிரதேசத்தில சேர்த்து, அதில் அநத இந்துக்களுக்கு இடவசதி செய்ய வேணடும என்று அவர் குறிப்பிடுகிறார்.

பாகிஸ்தான் இப்போது மைனாரிட்டிப் பிரச்னையில் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்றால், அவர்கள் ஒரு விஷயத்தை தெள்ளத் தெளிவாக உணர்நது கொள்ள வேண்டும். அதாவது காங்கிரஸ் மத சார்பற்ற ஸ்தாபனம். இந்திய அரசாங்கமும் மதச் சார்பற்றது. ஆனல் அந்த மதச் சார்பற்ற தன்மைக்கு ஒரு வரமபு உண்டு. இநதிய மக்களுககு மானம், ரோஷம், உணர்ச்சி எல்லாம் உண்டு; நிறைய உண்டு.

பாகிஸ்தான் நியாயமாக நடக்கவில்லை என்றால், இநது மகா சபையினரிடம பரிவு காட்டும போககு இந்தியாவில் அதிகரித்துவிடும். அதனல் இந்தியாவுக்கு நன்மையோ, இல்லையோ, பாகிஸ்தானுக்கு நிச்சயம் நன்மை இல்லை.




# போஸ்ட் ஆபீஸ் ஸேவிங்ஸ் பாங்க்

*உங்கள் வீட்டு வாசலிலேயே உள்ள ஒரு பாங்க்*

* பரிபூரண நம்பிக்கையை அளிக்கிறது
* விரும்பும்போது பணத்தை டெபாஸிட் செய்யலாம்
* தேவைப்படும்போது பணத்தை எடுத்துக்கொள்ளலாம்
* ஆண்டுக்கு வரி இல்லாத 3 சதவீத வட்டியைப் பெறலாம்

## தேசீய சேமிப்பு நிறுவனம்



# பஞ்சாமிர்தம்

**அரசியல் விவகாரங்களையே குழைத்துத் தந்து அலுத்துவிட்ட 'பஞ்சாமிர்த' அமைப்பாளர் பம்பாயில் நடைபெற்ற அரசியல் சம்பத்தப்பட்ட அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மகாநாட்டில் நடந்த அரசியல் கலப்பற்ற சுவையான பல நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார். சுவைப்பதற்கு அவை பஞ்சாமிர்தம்! சிரிப்பதற்கும் ரசிப்பதற்கும் ஒரு விருந்து!**

பிரதம மந்திரி நேரு பம்பாயில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களுக்கு பெருத்த மகிழ்ச்சியையூட்டினார்.

தம்மிடமிருந்து இன்னும் இளமைத் துடிப்புப் போய்விடவில்லை என்பதை அவர் காட்டினார்.

சமீபத்தில் நோய் வாய்ப்பட்ட பின்னர் பிரதமர் நேரு உட்காருமபோதும் எழுந்திருக்கும்போதும் ஓரிடம் விட்டு மற்றோரிடத்திற்குச் செல்லும்போதும் அவருடன் கைத் தாங்கலாக யாராவது போய்க் கொண்டிருப்பது பழக்கம்.

அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில் பிரதமர் நேரு பேச வேண்டிய நேரம் வந்தபோது ஒரு பெரிய காங்கிரஸ் தலைவர் கைத் தாங்கல் உதவிக்காக நேருவின் பக்கத்துக்குப் போனார். ஆனால் நேரு அவருடைய உதவிக்காக காத்திருக்கவில்லை. தாமே சட்டென்று எழுந்தார். மட மட வென்று நடந்தார். நடுவில் கிடந்த நாற்காலி ஒன்றை சுற்றி வளைத்து விறு விறுப்போடு 'மைக்'குக்கு முன்னால் போய் நின்றார்.

நின்றுகொண்டே அவர் பேசினார்.

இப்படி பழைய மாதிரி இளமை வேகத் துடிப்புடன் நேரு மறுபடியும் நடமாடியதைக் கண்ட கூட்டத்தினருக்கு ஏக சந்தோஷம். பலமாகக் கைத் தட்டி உற்சாகப்படுத்தினார்கள். "ஜவகர்லால் நேரு ஜிந்தாபாத்" என்று முழங்கினார்கள்.

0 0 0

கண்டிப்பான தலைவர் தாம் என்பதை காமராஜ் ஒரு சந்தர்ப்பத்தில் காட்டிக்கொண்டார். அதிலும் வாயைத் திறக்காமலேயே கூட்டத்தை கட்டுப்பாடு நழுவாமல் நடத்த முடியும் என்பதையும் காட்டினார்.

பம்பாயில் அ. இ. கா. கமிட்டி கூட்ட முடிவு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. பேசுவதற்கு பலர் காத்திருந்தார்கள். எல்லோருக்கும் சந்தர்ப்பமும் தரவேண்டும்.

காங்கிரஸ் பொதுக்காரியதரிசி எழுந்து இனி பேச்சாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஐந்தைந்து நிமிடங்கள் தான் ஒதுக்கப்படும் என்று அறிவித்தார். அப்போது காமராஜ் கையைத் தூக்கி இரண்டு விரல்களை காட்டினார். காரியதரிசி அதைப் புரிந்துகொண்டு தமது அறிவிப்பைத் திருத்தி "இரண்டு நிமிடங்கள் தான் அனுமதிக்கப்படும்" என்று அறிவித்தார்.

0 0 0

ஜனநாயக, சோஷலிச தீர்மான அமல்பற்றிய அறிக்கைமீது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய வி. கே. கிருஷ்ண மேனன் ஒரு இளம் கவிஞரின் கவிதையிலிருந்து ஒரு அடியை எடுத்துச் சொன்னார்.

அதன் பொருள் வருமாறு;

"தேவை என்ன என்ற
தெளிவு இல்லா விட்டால்
ஆசை மட்டும் இருந்து
ஆவதொன்று மில்லை—
திட்ட மில்லா ஆசை
தீமையாக முடியும்
கெட்ட நோயாய்மாறி
கெடுதியாகி நிற்கும்"

தேபர் கமிட்டி அறிக்கை வறுமையைப் போக்க வேண்டுமென்ற ஆசையை தெரிவிக்கிறது. ஆசையோடு, அதற்குப்பின்பலமாக இலட்சியத்தைப் பற்றியும் அதையடைய ஒரு திட்டமான வேலை திட்டத்தைப் பற்றியும் தீர்க்கமான தெளிவு இல்லாவிட்டால் எதுவும் நடக்காது என்று கிருஷ்ணமேனன் கூறினர்.

0 0 0

அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் பேசிய பேச்சாளர்களில் பலர் நீளமான சொற்பொழிவுகளால் பயனில்லை என்று திரும்பத் திரும்பச் சொன்னர்கள். அதாவது வகுப்பு ஒற்றுமையை நீண்டபிரசங்கங்களால் ஏற்படுத்திவிட முடியாது என்று சொன்னர்கள். இப்படிச் சொன்னவர்களில் அநேகமாக எல்லாருமே இந்தக் கருத்தை வலியுறுத்த தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை விட அதிகமாகவே பேசினர்கள்.

0 0 0

முன்னுள் பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனனுக்கு நீங்காத தோழனுக விளங்குவது அவருடைய கைத்தடி. அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் தமது கைத்தடியை புதிய முறையில்மேனன் பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

மேடையில் ஒரு புறம் உட்கார்ந்து கொண்டிருந்த அவர் கைத் தடியால் அங்கு கிடந்த தலையணைகளை இழுப்பதும் தள்ளி விடுவதுமாக காலம் கடத்திக் கொண்டிருந்தார். இடையிடையே தமது பக்கத்தில் இருப்பவர்களுக்கு தலையணை தேவையாக இருந்தால் அதைக் கைத் தடியால் இழுத்து சப்ளை செய்து கொண்டிருந்தார்.

0 0 0

பம்பாய் மந்திரி டாக்டர் ரபீக்ஜக்கேரியா அ. இ. கா. கமிட்டி கூட்டத்தை கவி அரங்கமாக மாற்றி விட்டார்.

வகுப்பு நிலவரத் தீர்மானத்தின் மீது பேசிய அவர் வகுப்பு சௌஜன்யம் பற்றி தாம் இயற்றிய ஒரு நீண்ட உருது கவிதையையே ஒப்புவித்தார்.

இரண்டு மூன்று கட்டங்களில் கவிதையின் கருப் பொருளை ரசித்த பிரதமர் நேரு தலையை ஆட்டி "சபாஷ்" தெரிவித்தார்.

0 0 0

ராஜஸ்தானிலிருந்து வந்த அகமத் பக்ஸ் சிந்தி என்ற பிரதிநிதி பேசிக் கொண்டிருந்த போது அவருக்கு திடீரென்று திருமதி லக்ஷ்மி மேனனின் பெயர் நினைவுக்கு வராது போயிற்று. அவரைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தபோது "நமது சகோதரி திருமதி கிருஷ்ணமேனன்" என்று அவர் சொல்லிவிட்டார். உடனேயே தாம் செய்த தவறையும் புரிந்து கொண்டு அதை திருத்த முயன்றார். "அதாவது சகோதரி விஜயலட்சுமி என்றார். அதுவும் தவறு என்று தெரிந்த அவர் சற்று தயங்கி விட்டு "நமது வெளி விவகார அமைச்சு உதவி மந்திரி" என்று திருத்தி கூறி முடித்தார்.

(இதுவும் தவறுதான். திருமதி லட்சுமி மேனன் உதவி மந்திரியல்ல. வெளிநாட்டு அமைச்சு ராஜாங்க மந்திரி அவர்.)

# என்று காண்போம்!

(எழில்முதல்வன்)

பழுத்த தமிழ் நூலறிவால், உணர்ச்சி யோடு
பழுதாகாச் சொற்களினால் செய்யுள் நெய்த
முழுப்புலவா! தமிழினத்தார் அந்த நாளில்
மூங்கையராய்ச் செவிடர்களாய் வாழ்ந்த போது
விழிப்புணர்ச்சி தந்தவனே! கவிக்கோ மானே!
விதைநெல்லைப் போன்றவனே! மரணம் உன்னை
அழித்தாலும் நீஎழுதிக் குவித்த பாடல்
அழியாது! மறையாது! நிலைத்தே வாழும்

பாரதிர, விண்ணதிர, ஆளும் வெள்ளைப்
பரங்கியரின் மனம் அதிரப் புரட்சி செய்த
பாரதிக்குத் தாசனே! பண்சு மந்த
பாட்டுதந்த கவிக்குயிலே! ஆரி யத்தின்
வேரதிரப் புதுக்கவிதை பாடித் தந்தாய்!
வெடிமருந்து போல் வாழ்ந்தாய்! பகைமை யாலே
ஆரெதிர்த்து நின்றாலும் உன்க ருத்தை
அடகுவைத்து வாழாமல் தனித்தே நின்றாய்!

நிலவுலகின் பரப்பளவு என்ன என்று
நின்றுகொண்டு அளப்பதுபோல் தோன்று கின்ற
மலைபோன்ற நெடுமேனி; எதையும் தாங்கும்
மலைக்காத தடந்தோள்கள்! தமிழுக் கென்றால்
தலையினையும் கொடுக்கவரும் நெஞ்சம்! உன்றன்
தமிழ்வடிவை என்று இனிக் கண்ணால் காண்போம்!
நிலைகலங்கி நிற்கின்றோம்! நீயோ மீளா
நித்திரையில் ஆழ்ந்துவிட்டாய்! நினைவாய் ஆனாய்!

காலன்எனும் கண்ணிலியே! கொடிய கூற்றே!
காடடர்ந்த முதுகாடே! பாடை வீடே!
வேலையினை நீமுடித்துக் கொண்டு, எம்மை
வேதனையில் தள்ளிவிட்டாய்; தமிழர் நெஞ்சம்
பாலைநிலம் ஆயிற்று: உனது யானைப்
பசிக்கிரையாய் இவன்தானா கிடைத்தான்? எங்கள்
ஓலத்தை எவ்வாறு அறிவாய்? மாட்டாய்!
உன்வேலை என்றென்றும் அழித்தல் தானே!

அழகான சொற்களையே எண்ணி எண்ணி
ஆராய்ந்து தேர்ந்தெடுக்கும் புலவீர்! நீங்கள்
பழகுதமிழ் நடையினிலே அழியா இந்தப்
பாவேந்தன் புகழ்தம்மைப் பாடவாரீர்!
இழந்தபின்னர் போற்றுகின்ற தமிழ்நாட்டாரே!
இனியேனும் இவன்சொன்ன நெறியில் நின்று
முழுவாழ்வு வாழுங்கள்! தமிழுக்கு ழைத்தே
மூச்சுவிட்ட இக்கவிஞன் புகழ்பா டுங்கள்!

# தங்கப்பதுமை

**வே.சு.சண்முகவடிவேலு**

கதிரவன் தன் பொற்கிரணங்களைச் சிறிது சிறிதாகக் குறைத்த வண்ணம் மலைவாயிலில் விழுந்த வண்ணம இருந்தான். மேற்கு வானம் செபபுத் தகரம் ''போல் சிவந்து'' கதிரவனை வழியனுப்பிக்கொண்டிருந்தது. வானில் எங்கும் வானத் தாரகைகள சூழ்ந்து நின்று அணி செய்ய ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் கண் சிமிட்டியபடி தோன்றிய ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களுக்கு தலைமை தாங்க எழுவது போல பூரணசந்திரன் வானில் பவனிவரத துவங்கினான். குவிந்து கொண்டிருக்கும் தாமரை மலர்களைப் பார்த்து சிரித்த வண்ணம் அல்லி தனது வெண்மையைக் காட்டி நின்றது.

சென்னைக்கே அழகூட்டும் அந்த மெரினா கடற்கரையில் — அநதப் பூரண நிலவையும், அதன் குளுமை பொருந்திய ஒளி வெள்ளத்தையும ரசித்துக் குளிததபடி — மக்கள் கூட்டம திரிந்து கொணடிருந்தது. அவர்களிலே பலர் அந்த நிலவின் மென்மையை அனுபவித்து நின்றார்கள் என்று சொல்ல முடியாது. வாழ வசதியற்று — வாழ வழியற்று — தாஙகாமல் தாங்கி தங்களது பொன்மயமான எதிர் காலத்தை வீணாக்கி — நாகரீக மாயையில் உழன்று திரிபவர்களும் இருந்தார்கள்.

தூரத்தே வரிசையாக — கடற்கரையின் அழகுக்கு அழகு செய்வது போல கார்கள் நின்றுகொண்டிருந்தன. சிலவற்றிலே வானொலிப் பெட்டிகள் ஏதோ — புரியாத மொழியில் பேசியும் பாடியும் கூட மக்களின் காதுகளைத் தன் பக்கம் திருப்ப இயலாமல் தவித்தன. கடலின் ஒலியும் — மக்களின் ஆரவார நடமாட்டங்களுக்குமிடையில் வானொலிப் பெட்டிகளின் ஓசைகள் எடுபடவேயில்லை.

இந்த சந்தடி மிகுந்த கடற்கரையின் வெண் மணற் பரப்பிலே ராஜசேகரன், தனது நண்பன் மணியுடன் - தூரத்தில் சைக்கிளைக் கீழே படுக்கவைத்துவிட்டு அமர்ந்துகொண்டிருந்தான்; அந்த ஆரவாரங்களுக்கிடையிலும் அவர்களுக்குள்ளே ஒரு அமைதியே நிலை கண்டிருந்தது.

“நளினி எங்கு போயிருப்பாளென்று நினைக்கிறாய்?” - மணி நீண்ட இடைவெளிக்குப் பின் அறுபட்ட பேச்சை மீண்டும் ஆரம்பித்து - விடை காண முற்பட்டான்.

“யாருக்குத் தெரியும்? எங்கு போனாளோ? - யாரோடு போனாளோ?” - மிகச் சலித்துக் கொண்டு பதில் சொன்னான் ராஜா.

“ச்சே! என்ன இப்படியெல்லாம் பேசுகிறாய் - முதலில் வாயைக் கழுவு. உனக்கு ஏன் நாளுக்கு நாள் புத்தி இப்படி போகிறது?” - ஆத்திரத்தோடு - ஆனாலும் அன்போடு ராஜாவைக் கடிந்துகொண்டான் மணி. அதற்கு அவனுக்கு உரிமையும் இருந்தது.

ராஜா தொடர்ந்தான்:

“பின் என்ன மணி ... நானும் நாளுக்கு நாள் பார்க்கிறேன். வர வர அவள் போக்கும் அவள் பேச்சும் எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை... உண்மையிலேயே நான் இப்போது தான் உணர்கிறேன் அவளை மணந்து கொண்டது எவ்வளவு பெரிய தவறு என்று! என்று அவள் என் வாழ்விலே குறுக்கிட்டாளோ அன்று முதலே - எனது வாழ்வு இருண்ட பாலையாக மாறிவருகிறது” ராஜா மிக்க துயரத்தோடு பேசினான்.

தெள்ளென வீசிய நிலவின் ஒளியிலே, கடல் தனது நீண்ட அலைகளை நீண்ட தூரம் வீசி நடந்தவண்ணம் இருந்தது. ஆழ் கடல் அமைதியடையுமா? ராஜாவின் துயரம்மிக்க உள்ளமே போல் அது கோபாவேசமாக தனது ஓட்டத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. கடலின் அந்த சலன ஓட்டம் ராஜசேகரனை எங்கெங்கோ கொண்டு சென்றது. நிலவு வீசும் மென்மை கொண்ட அந்த ஒளியே அவன் உள்ளத்தைச் சுட்டு எரித்தது. அவனது இளமைக் காலம் அவன் முன் நொடிக்கு நொடி தோன்றி மறைந்து கொண்

டிருந்தது. அந்த இளமை சூழ்ந்த நல்ல காலத்திலே அவனுக்கிருந்த தன்னம்பிக்கையும், தைரியமும இப்போது இல்லை - காரணம்? காரணமென்ன - எல்லாம் அந்த நளினி தான் என்று ராஜா மட்டும் எண்ணிக் கொண்டிருந்தான்; பாவம் ஒரு பக்கம் பழி ஒரு பக்கமா?

ராஜசேகரனுக்கு 19 வயது நடந்துகொண்டிருந்தது. கோவை அரசினர் கல்லூரியில் அவன் இறுதியாண்டு பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்தான். இந்த இள வயதிலேயே அவன் கல்லூரிப் படிப்பிலே மிக முன்னேற்றம் கொண்டு திகழ்ந்தது அவனையொட்டிய அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. அவனுடைய கல்லூரி படிப்பில் கடந்த இரு ஆண்டுகள் எவ்வித சலனமோ-சஞ்சலமோ இன்றி கழிந்தது, ஆனால் மூன்றும் ஆண்டில் தான் அவனுடைய கல்விககே முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய அந்த சம்பவம் நிகழ்ந்தது. நளினி-ராஜாவின் சக மாணவி-கல்லூரி மாணவிகளுக்கேயுரித்தான எல்லா நாகரீசமும்- அவளுக்கு முழுச் சொந்தம். ஆனல் இயற்கையே அவளுக்கு அழகை வஞ்சனையின்றி அள்ளிக் கொடுத்திருந்தது. படிப்பிலே மிக சூட்டிகை. குணமும மிக நல்லதாகவே அவளிடம் அடைக்கலம புகுந்திருந்தது.

இரண்டாம் ஆண்டு இறுதியிலே நடந்த கல்லூரி ஆண்டு நிறைவு நாடக விழாவின் போது நாடகங்கள் போடுவதால் ஏற்பட்ட போட்டி காரணமாக- ராஜாவும் நளினியும் சந்திக்க நேர்ந்தது. ஆனல அவர்களின் முதல் சந்திப்பு—தெம்புணர்ச்சியோடு தான் இருந்தது.

ஆனல் அந்த எதிர்ப்பு சக்தியை காலமும்- அந்தக் கல்லூரி வாண்டுகளுமாகச் சேர்ந்து- ராஜா நளினி இணையை இணைத்துப் பேசி, அவர்களுக்கு ஒரு நட்பை யுண்டாக்கி வைத்தது.

அவ்வளவுதான் பஞ்சும் நெருப்பும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா?

நட்பு அன்பாக முளையிட்டு காதலாக பூத்து நின்றது.

கதை கட்டிவிட்ட கல்லூரி மாணவர்களுக்கு அவர்களின் வேடிக்கைப் பேச்சுக்கும் ஜாலி விளையாட்டுக்கும்- பாவம் இந்த காதல் இணைதான் கிடைத்தார்கள். நான்கு பேர் சேர நின்று பேசும் போது, ராஜா நளினி சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும்.

செய்திகள் கல்லூரியைக் கடந்து இரு வீட்டாருக்கும் எட்டியது. அவர்களுடைய 'களவு வாழ்வு' வெளிச்சத்துக்கு வந்தது.

தங்கள் பிள்ளைகளின் காதலையும் அவர்கள் செல்லும் வழியையும் ஆதரித்து அவர்களை இணைத்து வைதது அவர்கள் வாழ்வதைக் கண்கொண்டு காணலாம் என்ற எண்ணம் இரு வீட்டாருக்கும் ஏற்படவே யில்லை.

விளைவு!—

ராஜா-நளினி முன்னேற்பாட்டுடன் கல்லூரிப் படிப்பை பாதியிலேயே கத்தரித்துக் கொண்டு, இத்துணை நாள் தங்களைப் பெற்று வளர்த்த அன்புள்ளங்களை - மறந்து சென்னை நோக்கி பயணமாயினர்.

அங்கு ராஜாவுடன் உயர்நிலைப் பள்ளியிலே உடன் படிதத மணி ராஜாவை இரு கரம் நீட்டி வரவேற்றான். சிறிது வசதியுடன் வியாபாரத்தில் ஈடுபட்டிருநத அவன் ராஜா நளினி இணையை உடனடியாக வடபழனி ஆண்டவா சன்னதிக்கு அழைத்துச் சென்று தம்பதிகளாக்கினன்.

தனக்குத் தெரிநத ஒரு தனியார் கம்பெனியில் ராஜாவுக்கு நூற்றைம்பது ரூபாய் ஊதியத்தில் ஒரு வேலையும தேடி வைதது, தனிக் குடித்தனமும் அமைததுக் கொடுத்தான்.

ராஜா நளினி இணையின் வாழ்வு இன்பப் பூங்காவிலே தேன் உண்டு மகிழும வண்டின் மனம் போல உல்லாச நடை போட்டது. அவர்கள் காதல் வாழ்வு பூதது காய்த்து கனிந்தது இரண்டாம ஆண்டிலேயே — ராஜா, தனது பையனைத் தூளியிலிட்டு 'ஆராரோ'—பாடி மகிழ்ந்தான்,

வாழ்வுப் பாதையிலே அமைதியாக நடைபோட்டுக் கொண்டிருந்த அவர்களின் வாழ்விலே சஞ்சலங்கள் நிறைந்த நாட்கள் சில இடைமறிததன.

கடந்த சில நாட்களாக இருவருடைய மனமும் இரு வேறு துருவங்களை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தன. தன்னைக் கண்டால் முன்பு போல அன்பும் ஆர்வமும் பாசமும் கொண்டு நடப்பவளாக அவள் இல்லை' என்று ராஜா சொன்னான். 'நான் ஒன்றும் அப்படியில்லை அவர்தான் ஏதேதோ மனதில் வைத்துக்கொண்டு தனது வழியை திசை மாற்றி நடந்து கொண்டிருக்கிறார்' என்று நளினி நினைததுக் கொண்டாள். ஒருவருடைய உள்ளம் ஒருவருககு பிடிபடாமலேயே. அவர்களுக்குள் ஒரு தார்மீக வேற்றுமை உருவாகிக கொணடிருநதது. ஆனல் அனைததையும் 'ராஜா' தான உண்டாக்குகின்றான் என்றே சொல்லவேண்டும். ஆனல, ராஜா தனக்குள் ஏற்பட்ட வேற்றுமையை மெல்ல மறைதது நீறு பூத்த நெருபபாகவே பழகி வந்தான்.

ஒரு நாள் காலையில் தன்னையே யறியாமல் அநத நெருப்பை யூதிவிட்டாள் நளினி.

அன்று காலையில் எழும்போதே ராஜாவுக்கு மனது சரியிலலை. இரவு கணட கனவுகள். அலுவலக தொந்தரவுகள வேறு எழுந்து சென்று குளியலறையில் தண்ணீர் எடுக்கமுனைநதான் காலதிடீரெனவழுக்கியது.

நல்ல வேளை கீழே விழ வில்லை! விழுந்திருததால் ஒரு முழுப் பல கிடைப்பது துர்லபம். குளியலறை இருந்த லடசணம பற்றி சற்று இறைநது நாலு வார்ததைகளால நளினியை வைது தனது ஆததிரத்தை அடக்கிக் கொணடான்.

கூடத்துக் கடிகாரம் எட்டு மணி அடித்து விட்டு மீண்டும் தனது நடையைத் துவக்கியது. அன்று அவனுக்கு சிறிது நேரத்திலேயே அலுவலகம போகவேணடும். ஆனல் அவன் நினைததபடி அன்று நேரததில் டிபன ஆகவில்லை. 'சசே என்ன வீடு, என்ன மனைவி என்ன பெண்டு பிள்ளைகள வேண்டிககிடக்கிறது' தனக்குள்ளேயே முனகிக் கொண்டான்.

அந்த நேரம் பார்த்துக் கைக் குழந்தை 'வீல....' என்று சத்தம கொடுததது. ராஜா மிகப் பயந்து விட்டான. காரணம குழநதை கூடத்து மேஜை யருகில் கீழே படுக்க வைக்கப்பட்டிருந்வது. அருகில் ஒரு பூனை நின்று கொணடு இருந்தது. குழநதையின் சத்தத்தைக் கேட்டு ஓடி வந்த நளினி குழநதையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டாள். குழந்தைக்குப் பாவம் பசி. அது அவளது மேலாடைமேல் கை போட்டது. அப்படியே கீழே அமர்ந்து பால் கொடுக்க ஆரம்பித்தாள்.

சரி இனி நின்று தாமதித்தால் அலுவலகத்தில் போய் நேரங்கழிதது வந்ததற்கு கண்டவனிடம் பல்லைக் காடட வேணடியிருக்கும் என நினைத்து ராஜா எழுநது டிபனை மறந்து அலுவலகத்தை நோககி நடந்தான்.

நளினிக்கு என்னவோ அவனைத் தடுத்து நிறுததமனம இல்லை. 'சரி போய் எங்காவது ஹோட்டலில் வயிறறை நிரபபிக் கொணடு தானே போவார்' எனற தன்மையில தனது காலம் கடக்கும் நிலையை எண்ணிக கொண்டாள.

ஆனல் அவன் இன்றுவரை நளினியை விடடு ஓர் முறை கூட தனிமையில ஹோட்டலில் 'வெறும காபி' கூட சாபபிட்டதில்லை என்பதை அவள எப்படியறிவாள். இனறும பட்டினியுடனேயே தான் அலுவலகம போய் அவன் திரும்பப் போகிறன் என்பதையும் அன்று மாலையில் தானே உணரப போகிறள.

மாலை சரியாக ஏழு மணிக்கு காயும் வயிறேடு சிறு குடல பெருஙகுடல் கவவும் நிலையில் தனது வீட்டை நோக்கி வநது கொணடிருந்தான் ராஜா!.... பாவம் அவனுடைய பசிக்கு உணவு தர வேண்டிய மங்கை என்றும்ம அலுவலகம் விட்டு வரும் கணவனை வழி வழியாய்ப பார்த்திருககும் அநத நஙகை நளினி இந்த நேரததில கதவைப் பூட்டிவிட்டு எங்கோ போய்விட்டாள்.

ராஜாவின் உயிர் இரு விநாடிகள் எங்கோ போய் மீண்டும் அவனிடமே வந்து அடைக்கலம கண்டது.

அவனுடைய கண் வலது பககத்து வீட்டைப பார்ததது. நளினியின் நெருங்கிய சிநேகிதிக்குச் சொந்தமான அந்த வீடும் பூட்டப படடிருந்தது. இடது பக்கத்து வீடடுக்கும் இவர்களுக்கும கடந்த ஆறு மாதங்களாக ஒரு சச்சரவு காரணமாக 'வாய் வார்த்தை' கூட இல்லை. இப்போது அந்த

வீட்டிலும் போய் நளினி எங்கு போனுள் என்ற விபரத்தை அறிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. அவனுக்கு செய்வதை எதுவுமே தோன்ற வில்லே 'சரி மூன்ருவது வீட்டிலாவது கேட்டு வைக்கலாம்' என அந்த வீட்டை நோக்கிப் போனுன். அங்கு இருந்த ஒரு பெரியம்மா விசயத்தைப் பிட்டுப் பிட்டு வைத்தாள்.

"இப்பொழுது தான் மணி ஐந்தரை இருக்கும் யாரோ ஒரு வாலிபன் கார் கொண்டு வந்து அழைத்துப் போகிருன். எங்கு போகிருர்களென்று தெரியவில்லே அவர்கள் சொல்லவுமில்லே. வீட்டுச் சாவி யெதுவும் கொடுத்து விட்டுச் செல்லவும் இல்லே."

விபரம் சொன்ன அந்த அம்மையாருக்கு நன்றி கூறி தன் நண்பன் மணியின் வீட்டை நோக்கி நடந்தான். வழியெல்லாம் ஆயிரமாயிரம் எண்ணங்கள் ஆயிரமாயிரம் சந்தேகக் கோடுகள் –

"அப்படியு மிருக்குமோ?"

"ச்சே! ச்சே! நிச்சயமிருக்காது!"

யாரோ அடிக்கடி ஒரு வாலிபன் தன் வீட்டுக்கு வநது போகிருன் என்று பக்கத்து வீட்டுக் குழந்தைகள் மூலம் இவன் கேள்விப் பட்டிருந்தான். ஒரு வாலிபன் வந்து சென்ற செய்தியை பக்கதது வீட்டு சிமா- அவனுக்கு வயது எட்டுததான்- தன் ராஜா மாமாவிடம் சொல்ல முயற்சித்த போது, அவன் காதைப் பிடிததுத் திருகி வீட்டுக்குள் அழைத்துச் சென்று விட்டாள் நளினி.

இவனுக்கு அப்போதே சந்தேகம்- "ஏன் அதைக கண்டிக்கிறே யார் வந்து போனது" என்ற ராஜாவின் கேள்விக்கு, மத்தியானம் உங்க கம்பெனி பியூன் வநதானே அதைத் தான் சொல்லுகிருன" என்று சொல்லி மறைதது விடடாள் நளினி. ஆனுல் அன்று பியூன் வந்ததும் நிஜம் தான வேறு ஒரு வாலிபன் வந்து சென்றதும் மெய்தான்; வந்து சென்ற பியூன் சாக்கில் நளினி அன்று தப்பித்துக் கொணடாள்.

ஆனுல் மற்றும் சில தடவைகள் ஒரு வாலிபன் வந்து சென்ற செய்தி பக்கத்து வீட்டார் மூலம் அவனுக்குத் தெரிய வந்தது. ஆனுல் எதையும்- நளினியிடம் கிளறிக் கேட்டு– கசக்கி முகர்ந்து வீசி யெறிய 'ராஜா' ஆசைப் பட வில்லே.

இந்த நிலேயில் இன்று ஒரு வாலிபனுடன் இவள் காரில் சென்ருள் என்று கேள்விப் பட்டதும் அவன் மனம 'வங்காள விரிகுடா, வை விட அதிக கொந்தளிப்பு கொண்டது.

நேரே மணியின் வீட்டை அடைந்து அங்கு அவன் கொடுத்த ஒரு டம்ளர் காபியை பச்சைத் தண்ணீரைக் குடிப்பது போல விரகதியோடு குடித்து குடலே நனைத்து வைத்துக் கொண்டு சைக்கிளோடு மணியையும் அழைததுக் கொண்டு கடற்கரை நோக்கிப புறப்பட்டான் ராஜா.

கடற்கரை சென்று சேரும் வரை ராஜா வாயை திறக்கவிலலே அந்த மெரினு கடற்கரையில் அந்த ஜனமாட்டத்திறகிடையில் சென்று, அநத வெண் மணலில் அமர்ந்த போது தான், அவனுடைய மெளனத்தை மணி கலேத்தான்.

இந்த நேரத்தில் தான் மணி ராஜசேகரனைப் பார்த்து "நளினி எங்கே போயிருப்பாளென்று நினேக்கிருய்?" என்ற கேள்வியைக் கேட்டு வைத்தான்.

இராஜசேகரன் மீண்டும் தனது குரலே சோகததால் குழைய விட்டு வார்த்தையை வெளியிட்டான்.

"மணி நீ என் உயிர் நண்பன்! என்னேயும் நளினியையும சேர்த்து வைததவன். எங்கள் வாழ்வை அநேகமாக நீ யறிவாய். கடந்த காலததில் எங்களுக்குள் ஏற்பட்டிருந்த மனக் கசபபையும் நீ அறிவாய்.

காரணமில்லாத, அவளுடைய புரியாத போக்கும், மீணடும தாய வீட்டை மிதிக்க வேண்டும எனறு கடநத பல நாட்களாகக் கூறிக் கொணடு வநததும் நீ அறிவாய். ஆனுல் உண்மையில் அவளுக்குத் தனியாகத் தன தாய் வீட்டை மீண்டும மிதிப்பதற்கு தைரியமே இல்லே.

மேலும் அவள் இந்தச்சென்னே வீதிகளிலே அதிகம பழகி விட்டாள். நான் இல்லாத போது யாரோ சிலர் வந்து போவதாக நான் அறிகிறேன். ஆனுல் அவள் சிரித்து மழுப்பு

கிறாள். தாலி கட்டிய கணவனான என்னிடம் அவள் எதையும் சொல்லி அதற்குப் பிராயச் சித்தம் தேடிக் கொள்ளலாம் தான். ஆனால் அவள் ஏனோ அதைச் செய்யாமல் என்னை 'கருவேப்பிலைக் கொத்து' போல் நினைத்து விட்டாள்.

நாளுக்கு நாள் அவள் உள்ளத்தோடு சேர்ந்து உடலும் உருகி வரும் உருக்கமும் அவளுடைய நடைமுறைகளையும் கவனித்து வருகிற எனக்கு அவள் எங்கோ வழி மாறிப் போய்க்கொண்டிருக்கிறாளோ என்ற சந் தேகம் முளைவிடுகிறது."

"என்ன? புரியும்படி சொல்!"—இத்தனை நேரம் ராஜாவின் பேச்சைக் கேட்டுக்கொண் டேவந்த மணி தன்னையுமறியாத ஒரு ஆத்தி ரத்தில் சற்று உஷாராகவே ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தான்.

ஆனால் அவனின் இந்த ஒலிமிக்க கேள்வி பற்றி ராஜா கவலைப்படவே இல்லை. நிதான மாக அவனுக்கு பதில் கூறினான்.

"ஆமாம் மணி! சென்னையில் அவள் தன் மனதை யாருக்கோ பறிகொடுத்துவிட்டாள் என நினைக்கிறேன்.

நாகரிக போதையில் மூழ்கி கல்லூரிப் படிப் பையும் கற்றுவந்த அவளுக்கு இந்த நாகரிகத் தலைநகரில் என்னைப்போன்ற எளிய ஒருவ னின் துணையோடு வாழ்வது அவளுக்குப் பிடிக்காமலிருக்கக்கூடும் என்றே நினைக்கி றேன்; அதன் எதிரொலிதான் இன்று காலை யிலே எழுந்த சின்னஞ்சிறு சச்சரவைப் பெரி தாக நினைத்துக் கொண்டு டேக்சியில் கால் வைக்க அவள் மனம் இடம் கொடுத்துள்ளது.

"ச்சி! ச்சி! நிறுத்து! என்னதான் கெட்ட பேச்சு பேசுகிறாய் நீ, கொஞ்சங்கூடப் பெண் மையை அறியாத அறியாமை கொண்டாள் கூட இவ்வளவு மட்டரகமாகப் பேசப்பட் டாள். 'காக்கை உட்கார்ந்து பனம்பழம் விழுந்த' கதைபோல மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு எதையோ பேசுகிறாயே. இவ்வளவுதானா நீ நளினியை அறிந்துகொண்டது......" ஆத்திரத்தோடு இருந்த சூழ்நிலையையும் மறந்து கேட்டான் மணி. ராஜாவின் தன்மையற்ற இதய பலவீ னத்தை நன்கு உணர்ந்து பேசினான் அவன்.

"பெற்ற தாய் தந்தையை விட்டு, பதி னெட்டு ஆண்டுகள் தன்னை வளர்க்க அவர்கள் பட்ட பாட்டை மறந்து வினாடியில் என்னை நம்பி என் கூடப் புறப்பட்ட அவள் இந்த வேலையை மட்டும செய்திருக்கமாட்டாள் என எப்படி நம்புவது?" மீண்டும் சற்றும் கூட பொருப்பும், என்னை யுணராத நிலைமையினு மாக ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தார் ராஜா.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் மணிக்கு ஆத்திரம் எல்லை மீறிவிட்டது. வேறு இடமாக இருந்திருந்தால் நிச்சயம் அவன் கைகளே பேசியிருக்கும்.

"முட்டாள்தனமாகப் பேசி அறிவிலிகளின் கூட்டத்தில் சேர முயலாத அவன் உன்னுடன் இவ்வளவு பலவீனமும மனப் பக்குவமும் இல் லாத உன்னுடன் ஓடிவந்தது உண்மையிலே அவளின் இமாலயத் தவறுதான். அதிலும் உன்னை முற்றும் உணராமல் நரம்பில்லா நாக் காக எடுபபார் கைப்பிள்ளைபோல போன திசைக்கு அனுப்பி வார்த்தை பேசும் உன்னு டன் ஓடிவந்தது பெரிய தவறுதான்.

உன்னுடன் அவள் ஓடிவந்தது கேவலமான ஒரு பிணைப்புக்காக அன்று. அப்படியிருந் தால் அதை அவள் இருந்த இடத்தில் இருந்து கொண்டே சாதித்துக் கொண்டிருக்கலாம். ஒரு பெண் ஒரு ஆணுடன் கைகோர்ப்பது தான் உண்மையிலே இறைவன் அவர்களுக்கு வழங்கியுள்ள அருள்நெறி. அதை நீ பயம் அறியவில்லை.

அவள் மட்டுமா தன் பேற்றோரை விட்டுவந் தாள் நீயும் கூடததான் உன் பெற்றோரை விட்டு வந்திருக்கிறாய், தன் முதுகு அறியா

ததுபோல தன் குற்றம் பாராமல் பிறர் மீது குற்றம் சுமத்துவதில் நீ இவ்வளவு வல்லவனாக இருப்பாய் என நான் நினைக்கவேயில்லை!

அவளுடன் ஓடிவந்த நீ மட்டும் அவளை வெறுத்துவிட்டு இன்னொருத்தி வலைவீசுவது தானே ஏன் சும்மா இருக்கிறாய்?" ஆத்திரத்தோடு பேசிவந்த மணி ராஜாவையும் ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தான்.

தலை குனிந்தபடியே மணியின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜா அதற்கும் பதில் சொன்னான். "நான் அவள்மீது கொண்டிருப்பது அப்பழுக்கில்லாத அன்பு."

"அதேபோலத்தானடா அவளும் இருப்பாள்...." ஆத்திரத்தில் மணி 'டா' போட்டுப் பேசினான். அதறகுள் யாரோ அவர்களை நோக்கி வருவதாய் படவே இருவரும் பேச்சை நிறுத்தினர்.

"என்ன சார்! கடற்கரையிலே சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்" என்றபடி ராஜாவின் அலுவலக பியூன் ரங்கன் அங்கு வந்தான் வந்தவன் அங்கு ராஜாவும் அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு,

"அடடே நீங்களும் இங்கு இருக்கிறீர்களா? உங்கள வீட்டிலிருந்து 5½ மணிக்கு ஆபீசுக்கு டேக்சியில்வந்து உங்களை விசாரித்தார்களே... நீங்கள் வீட்டுக்குப் போய்விட்ட செய்தி தெரிந்தவுடன் மீண்டும் வீட்டுக்கே வந்தார்களே இன்று ஏதாவது விசேடமா?"...

"அப்படியா ஏதாவது சொன்னாரா?" எனக் கேட்டபடியே ராஜா எழுந்தான்.

"என்னிடம் எதுவும் சொல்லவில்லை. மீண்டும் வீட்டுக்குத்தான் போனமாதிரி இருந்தது" என்றான் பியூன்.

உடனடியாக நண்பன் மணியையும் அழைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடநதான் ராஜா.

ஃ ஃ ஃ

மணி எட்டரையை நெருங்கிக் கொண்டிருந்தது. வீட்டை நோக்கி நண்பனுடன் வந்த ராஜா தன் வீடு பழையபடியே பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்தவுடன், திரும்பி மணியின் முகத்தைப் பார்த்தான்; மணியும் ராஜாவைப் பார்த்தான்.

ஆனால் இப்பொழுது அவர்கள் வீட்டுக்குத் தொட்டபடியே இருந்த வீடு திறந்திருந்தது; அங்காவது சென்று கேட்கலாம் என ராஜா நடந்தான்.

ராஜாவைக் கண்டவுடன் அந்த வீட்டு அம்மாள் ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்து "ஆறுமணி வரை உங்களை எதிர்பார்த்தார்கள் வராததால் இதை உங்களிடம் கொடுக்கும்படி கூறிவிட்டு டேக்சியில் புறப்பட்டுப் போய்விட்டார்கள். எங்கு என்ன என்பது கடிதத்தில் இருக்கிறதாம்....சற்று முன்பு நீங்கள் வந்ததாக மூன்றும் வீட்டு அம்மாள் சொன்னார். ஆனால் நான் கோயிலுக்குப் போய் சற்று முன்தான் வந்தேன்."

கடிதத்தை வாங்கி அவசரமாகப் பிரித்து உடைத்தார். எழுத்துக்கள் நளினியுடையது தான்; உள்ளே சில பத்து ரூபாய் நோட்டுகளும் இருந்தன; கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான் ராஜா...

என் அத்தான் அவர்களுக்கு,

முதன் முதலாக உங்கள் அனுமதியின்றி ஆனால் அவசரத்தை முன்னிட்டு அனுமதியை எதிர்பார்த்து வெளியே கால் வைப்பதற்கு மன்னியுங்கள்....

அத்தான் கடந்த ஆறு மாதங்களாகவே என் தாயாருக்கு உடம்புக்கு சரியில்லை; தாயின் ஏக்கம் என்னை வாட்டிற்று; ஓர் முறை போய் வரலாம் என்றேன். நீங்கள் வர மறுத்துவிட்டீர்கள். நான்மட்டும் எப்படிப் போக முடியும்?

கடந்த சில நாட்களாக மிகத் தொந்தரவு என என் அண்ணன் மூலம் தெரியவந்தது: அண்ணன் அடிக்கடி நீங்கள் இல்லாதபோது இங்கு வந்து விபரம் கூறிச் சென்றுகொண்டிருந்தார். தாயின் உடல் நிலை காரணமாக என்னுள் ஏற்பட்ட துயரம் நமக்குள்ளேயே சில சமயம் சிறு தகராறுகளுக்குக் காரணமாய் இருந்தது; அதை நீங்கள் பொருட்படுத்தியிருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன்.

இன்று என் தாய் மிகவும் கவலைக்கிடமாய்க் கிடப்பதாகவும் என்னை பார்க்க விரும்புவதாகவும் அண்ணன்வந்து சாயங்காலம் சொன்னார். உடனே காரில் உங்கள் அலுவலகம் வந்தோம்; நீங்கள் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்ட செய்தி தெரிந்தது; மீண்டும் நீங்கள் வரும் வழியாகவே உங்களைத் தேடிக்கொண்டு வீட்டுக்கு வந்தோம். ஆறு மணி வரை காத்திருந்தோம். உங்கள் வரவு கிட்டவேயில்லை'

தாய் மிக ஆபத்தான நிலையில் இருப்பதனால் நான் இந்தக் கடிதத்தை தங்களுக்கு எழுதிவிட்டுப் புறப்படுகின்றேன்; தாயை இறுதி முறையாக உயிரோடு பார்க்க என் மனம் துடிக்கிறது; எனக்கு என் தாயாரின் கடைசி காலத்தில் நான் செய்யும் கடைசி தவருக இருக்கப்போகிற இதை தாங்கள் மன்னிப்பீர்கள் என்றே நம்புகின்றேன்.

இத்துடன் ரூ. 200 என் அண்ணன் கொடுத்ததுதான் வைத்துள்ளேன்; தாங்களும் உடனடியாக ஒரு டேக்சியில் புறப்பட்டு கோவை வரவும்; கோவையில் எங்கள் வீட்டில் உங்களை மனமுவந்து வரவேற்பார்கள்.

தாங்களும் தங்கள் மாமியை உயிருடன் காணவும் அவளுடைய கடைசி நேரத்திலாவது நாம் இருவரும் அவளின் ஆசியைப் பெறவும் நீங்களும் உடனே புறப்படுங்கள்.

தங்களன்புள்ள மனைவி
நளினி

இராஜசேகரன் மணியோடு கோவை நோக்கி டேக்சியில் பறந்துகொண்டிருந்தான்; சிறிது நேர குழப்பத்தில் மனம் எண்ணிய தீய சொற்களை டேக்சி சென்ற அதே வேகத்தில் அவன் சுட்டுப் பொசிக்கிக் கொண்டிருந்தான்.

அந்த வெண் தணலில் வேகாத பொற் பதுமையாக அவனின் நளினி அவனுக்குக் காட்சி தந்துகொண்டிருந்தாள்.

---

# 'உதயம்'

அறிவாம் தமிழை ஏந்தி
குணமாம் பண்பை கொண்டு
சுவையாம் புதுமை மிளிர
மாதம் வருவது 'உதயம்'

'உதயம்' என்பதும் சொல்லே
அறி'வுதய மா'வது அறிவே.
'உதயம்' என்பதும் இதழே
இன்பம் மிகவுண் டதிலே'

நான்கிலே ஒருரூபாய் தந்து
நல்ல இதழைப் பெற்று
நலமிகு தமிழைப் படிப்பின்
நல்லறிவு 'உதய' மாகும்.

மூடத் தனத்தைப் போக்க-முக்ய
தேவை 'உதயம்' நம்
நாட்டுப் புதுமை விளங்க
உரைப்பது 'உதயம்' இதழே.

—தா. ப. ரகுபதி.



# தாயும் தாய்மையும்

"காதம்பரி"

-அருணா-

தஞ்சாவூரில் வருகிற புதன் கிழமையன்று சிவகுமாருக்குக் கல்யாணம் என்று அழைப்பிதழ்வந்தாலும் வந்தது, சுகந்தியின்கொட்டம் சகிக்கவில்லை. சிவகுமார் அவளுடைய அண்ணன். இருக்கட்டுமே அவனுக்குக் கல்யாணம் என்பதைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்து பூமியில் கால் பரவாமல் குதிப்பானேன்? சிவகுமாரின் மனைவியாகப் போகிறவள் எம். எஸ். சி. யாம். இதிலேயும் ஒருவிதப் புதுமையும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பார்க்கப் போனால் சுகந்தி கூட எம். ஏ. பாஸ் செய்திருக்கிறாள். பின் ஏன் இந்த ஆட்டமும் பாட்டமும்? சிறிது நேரம் செலவிட்டுச் சிந்தித்தபின் விஷயம் புரிந்தது. பிறந்த வீட்டில் ஏதாவது சிறப்பு நிகழ்ச்சி என்றால் பெண்கள் களிக்கூத்தாடுவது இயல்புதானே? பட்டதாரிணிகளும் அப்படித்தானா என்று உதட்டைப் பிதுக்க வேண்டியதில்லை. அவர்களும் பெண்கள்தானே?

திங்கள் கிழமையன்றிரவே சென்னையிலிருந்து புறப்பட வேண்டுவதாயிற்று. பிற்பகல் மூன்று மணிக்கே மூட்டை முடிச்சுக்கள் தயாராயின. எங்களைப் பொறுத்த வரையில் ஆளுக்கு ஒரு ஸூட்கேஸ் போதுமானது. ஆனால் குழந்தை விஜிதான் பெரிய பிரச்சனையாயிருந்தாள். வயது இன்னும் ஆறு மாதங் கூட ஆகாவிட்டாலும் அவளுக்குரிய பொருள்களும் ஏராளமாக இருநதன. உயர்வுநவிற்சியாகச் சொல்வதானால் எங்களைக் காட்டிலும் அதிகமான சாமான்களை அவள் பொருட்டு எடுத்துச் செல்ல வேண்டி வந்தது.

பெரிய பச்சைநிறப் பிரம்புக் கூடை ஒன்றின் இரண்டு அறைகளிலும் குழந்தைக்குத் தேவையான கிரைப் - வாட்டர், மில்க் - ஆப் மக்னிஷியா, கௌ - அண்ட்கேட் பால் உணவு பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட், பாக்கெட் டால்மியா க்ளூகோஸ் பிஸ்கட், ஜே. பி. மங்காராம் ஸ்பெஷல் பேபீஸ் பிஸ்கட், ஜான்சன் அண்ட் ஜான்சன்ஸ் பிரிக்லி ஹீட் பவுடர், பேபி ஸோப், பெரியரப்பர் ஷீட் ஒன்று, விளையாட்டுக் கருவிகள் சில, பீடிங் பாட்டில், குழந்தையின் வாயில் செருகி வைத்திருக்கப் பயன்படும் ரப்பர் அடைப்பான் ஒன்று, டபரா - டம்ளர், வடிகட்டி, சீசாவை சுத்தம் செய்யும் பிரஷ் - பெரிய டர்க்கிஷ் டவல் சிறிய துணித் துண்டுகள் நான்கு அதை என் கேட்கிறீர்கள் போங்கள்! ஏகப்பட்ட பொருள்கள் ! சுகந்தி ஒரு 'லிஸ்ட்' வைத்துக் கொண்டு இத்தனையையும் தயார் செய்தாள்.

திருவல்லிக்கேணியிலிருந்து புறப்படும் போது மணி ஐந்தரை ஆகிவிட்டது. டாக்ஸி வைத்துக்கொண்டு எழும்பூரை அடைந்தோம். போர்ட்டர் பொன்னுசாமி என்னுடைய வாடிக்கைக்காரன். அவனே முன் வந்து எங்களுடைய சாமான்களை எடுத்துக் கொண்டு போனான். தலையில் இரண்டு சூட்கேஸ்களையும் ஒரு படுக்கையும் ஏற்றினோம். அதற்கு மேல் யாரும் சுமை தூக்கிவிட முடியாது. ஆனால் பொன்னுசாமியின் அசட்டுத் தனமும், சோம்பேறித் தனமும் உலகப் பிரசித்தி பெற்றவை. அவன் பிடிவாதமாகக் குழந்தையின் அத்தியாவசியப் பொருள்கள் நிரபபப்பட்ட பிரம்புக் கூடையையும் எடுத்துச்செல்ல முயன்றான். நான் எவ்வளவோ சொன்னேன். "வேண்டாமடா பொன்னுசாமி! கீழேவிழுந்துவிடப் போகிறதடா! நான் வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்றேன். அவன் என்னை வாயடைக்கச் செய்து விட்டு எல்லாப் பொருள்களையும் தூக்கிக் கொண்டு வேகமாகவும் நடந்தான். மேம் பாலத்தைக் கடந்து கொண்டிருந்த போது நான் பயந்தவாறே ஆகிவிட்டது. எதிரிலே வந்த இன்னொரு போர்டருடன் எதிர்பாராமல் மோத நேரிட்டதால் படுக்கை ஆடிக் கீழே விழுந்தது. அதைப் பிடிப்பதற்காக இடது கையை

மேலே கொண்டு போனன் பொன்னுசாமி. அதன் விளைவாகப் பிரம்புக் கூடை கவிழவே அதனுள்ளிருந்த பொருள்களில் பல கீழே விழுந்து உருண்டன. முக்கியமாக கௌ-அண்ட் - கேட்டும் வென்னீர்ப் பாட்டிலும் பீடிங் பாட்டிலும் பாலத்திலிருந்து கீழே பிளாட் பாரத்தில் விழுந்து உடைந்தன.

பொன்னுசாமியை அறைய வேண்டும் போல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது எனக்கு. மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன். சுகந்திக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளவே சில நிமிஷங்கள் பிடித்தன. இந்தக் களேபரத்தில் ரயில் புறப்பட்டு விடுமோ என்ற அச்சம் வேறு பிடரியைப் பிடித்து உந்தித்தள்ளியது. ஆகவே பல்லைக் கடித்துக் கொண்டு படிக்கட்டுக்களைத் தாண்டி பிளாட்பாரத்தை அடைந்தோம். போட் - மெயிலில் இரண்டாம் வகுப்புட் டிக்கட் வாங்கியிருந்தோம். பொன்னுசாமி இருந்தவற்றில் அதிகக் கூட்டம் இல்லாத இரண்டாம் வகுப்புப் பெட்டி ஒன்றில் எங்களை ஏற்றிவிட்டான் சாமான்களை ஒழுங்கு படுத்தி வைப்பதற்குள்ளேயே ரயில் ஊதிவிட்டது.

இரண்டு நிமிஷங்கள் உருண்டன. ரயில் ஓடிக்கொண்டிருந்தது. என்னுடன் பிரயாணம் செய்யப் போகும் பேறு பெற்றவர்கள் யார் யார் என்று கண்ணோட்டம் விட்டேன். மூன்று வாலிபர்கள் ஒரு தம்பதிகள் - இளம் ஜோடிகள்தான் - நாங்கள் மூவர் - இவ்வளவு பேர்களும் அந்தப் பெட்டியை அடைத்துக் கொண்டிருந்தோம். வாலிபர்கள் மூவரும் பேசிக் கொண்ட பேச்சுக்களிலிருந்து கல்லூரி மாணவர்கள் என்று தெரிந்தது. சிதம்பரம் போகிறார்களாம் அவர்கள். தம்பதிகள் பேசாமல் உட்கார்ந்திருநதார்கள். கணவன் ஒரு பருமனை புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அல்லது படிப்பது போலப் பாசாங்கு செய்தானே என்னவோ? மனைவி, என் மனைவி சுகந்தியையும், குழந்தை விஜியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். சுகந்திக்கு இருபத்து நாலாவது வயது நடந்து கொண்டிருந்தது. அந்தப் பெண்ணுக்கு பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதுக்கு மேல் இராது போல் தோன்றியது. கணவனும் என்னைவிட இரண்டு மூன்று வயது இளைஞனாகத்தான் காணப்பட்டான்.

வாலிபர்களுடன் பேசுவற்கு எனக்கு இஷ்டமில்லை. அவர்கள் என்னைத் தங்கள் குழுவில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள் என்ற உணர்வு மனத்தினுள் இருந்தது. அதனல் சுகந்தியினிடம் திரும்பினேன். "நாலு மணிக்குத் தஞ்சாவூர் போகிறதாம் இந்த வண்டி. அது வரையில் விஜி என்னென்ன பாடு படுத்தவாளோ?" என்றேன். "எனக்கும் அதுதான் பயமாயிருக்கிறது. அந்தத் தடியன் இப்படிக் கௌ - அண்ட் - கேட்டைப் போட்டு உடைப்பான் என்று யார் கண்டது? என்றாள் சுகந்தி. விஜி இரவு வேளையில் சரியாகத் தூங்குவதேயில்லை. ஒரு மணிக்கு ஒரு முறை விழித்துக்கொண்டு வீல் வீல் என்று அலறுவாள். சில சமயம் பாலுணவைக் கரைத்துப் போட்டுவதும், சில சமயம் தாலாட்டிச் சீராட்டித் தூங்கப் பண்ணுவதுமாக ஆறு மாத காலத்தைக் கழித்திருக்கிறோம். வீட்டிலேயே விஜி யுடன் தூங்குவது கடினம். அதுவும் ரயிலில் இத்தனை நெருக்கடியில் தூக்கமாவது ஒன்றாவது?

தூக்கமின்மையைப் பெரியவர்களான நாங்கள் பொறுத்துக் கொண்டு விடமுடியும். குழந்தை விஜியின் நிலைமை பரிதாபகரமானது. அவளுடைய உணவுக்கே அல்லவா ஆபத்து வந்து விட்டது? நல்ல நாளிலேயே பீடிங் பாட்டிலை வைத்துக் கொண்டு மன்றாடிக் கெஞ்சிக் கொஞ்சிப் போட்டுவது வழக்கம். இப்போது அதுவும் இல்லையே! இந்தக் காலத்துப் பெண்களே இப்படித்தான்! எலும்பும் தோலுமாக ஒட்டி உலர்ந்து போன உடம்பை செயற்கையான அணிமணிகளால் அலங்கரிப்பதுதான் நாகரிகம் என்ற மனப்பான்மை எப்படியோ ஊறிப் போயவிட்டது. பெற்ற குழந்தைக்குத் தாய்ப்பால் தருவது கூட அநாகரிகம் என்று சொல்லும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். உடலில் சதைப்பிடிப்பு இல்லை. அதனல் போதுமான பால் சுரக்கவில்லை. நான் என்ன செய்வேன்? என்று அங்கலாய்த்துக் கொண்டாலும் மன்னித்துத் தொலைக்கலாம் அதுதான் இல்லை, சுகந்தியின் சமாசாரத்தில்!

சுகந்தியின் உடம்பு தள தள வென்று பூத்துக் குலுங்கும் பழமரம் போல், செழுமையும், இளமையும் பூரிததுக் கிடந்தது. குழந்தை விஜி இயற்கையான தாய்ப்பாலை நம்பியே நன்கு ஜீவிக்க முடியும். ஆனல் வீணான

தற்பெருமையும், அகம்பாவமும் ஆட் கொண்ட காரணத்தால் சுகந்தி அவளுக்குப் பால் தருவது இல்லை. பிரசவத்துக்கு முதல் நாளே புட்டிப் பால் வாங்கிச் சேமித்தாயிற்று. கௌ-அண்ட்-கேட் கம்பெனியாரின் புண்ணி யத்தால் எங்கள் விஜி அரையாண்டு வாழ்ந்தி ருக்கிறாள்.

செங்கல்பட்டு சந்திப்பை அடையும் வரை விஜி சமர்த்தாக இருந்தாள். தாயின் மடியில் புரண்டு கொண்டே எல்லோரை யும் வேடிக்கைப் பார்த்துப் பொழுதை போக்கினாள் பசி வந்தது இலேசான விக்கலும விம்மலுமாக ஆரம்பித்த அழுகை சிறிது நேரத்திற்குள் பன்மடங்கு ஒலிப் பின்னணியுடன் காதைச் செவிடுபட வைத்து விட்டது தவியாய்த் தவித்தாள் சுகந்தி. எனக்கும் ஆத்திரமும், கையாலாகாத் தன மும் மாறி மாறி உண்டாயின. வாலிபர்கள் என் மனைவியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பசிக்கிறது போலிருக் கிறது. என்றாள் எதிரில் இருந்த இளம் பெண். எங்களுக்கு மட்டும் அது தெரியா மலா இருக்கிறோம? இதுஎன்ன தர்மசங்கடம் என்று மனம வெதும்பினேன் நான். சுகந்தி தன்னுடைய ஆத்திரத்தை என் மீது காட்டத் தொடங்கினாள். எங்கே யானும் பால் விற்கி றதா பாருங்களேன். என்று அதட்டினாள் அவள். செங்கல்பட்டு ரயில் நிலையததில் பால் என்ற பெயரில் ஒரு திரவம் விற்கப்படுகிறது. எனக்கும் அது தெரியும். ஆனால் அந்தத் திரவம மிகச் சிறிய குழந்தைகளுக்கு உணவாக அளிக்கப்படத் தகுநததா என்பதை விஞ்ஞா னிகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இது விஷயத்தில் இன்னும் முடிவுக்கு வரவில்லை. நான் முன் யோசனை இல்லாமல் அதை வாங்கி என் குழந்தைக்குப் புகட்டி விட்டேனானால், ஏதாவது கேடு விளைந்தால் என்ன ஆவது என்ற இயற்கையான குழப்பம் கலந்த பயம் பிடித்துக் கொண்டது.

ரயில் நிலையங்களில் விற்கும் பாலில் பெரும் பகுதி பால்பவுடரின் பூரிதக் கரைசல் தான். அடுத்தபடியாக எருமைப் பாலும் தண்ணீரும் சரிசமமாகக் கலந்த கலவையும் சில இடங்களில் விற்கப் படுவதுண்டு. பசும் பாலையும் வேறு வழி யில்லா விட்டால் ஓரளவுக்குச் சிற் சில இடங்களில் கலந்து விற்கிறார்கள் என்று கேள்விப் பட்டி ருக்கிறேன். நூற்றுக்கு நூறு சதவீதம் சுத்தமான, தண்ணீர்க் கலப்பில்லாத பசும் பால். எங்குமே கிடையாது என்பதில் ஐயமில்லை. ஒரு ஹாஸ்ய எழுத்தாளர் இதைப் பின்வரும் விதமாகக் கூறியிருக்கிறார். சுத்தமான பசும்பால் கன்றுக்குட்டிக்குக் கூடக் கிடைப்பதில்லை. நமக்கு எப்படிக் கிடைக்கும்?

இப்படியெல்லாம் மனம் தடுமாறியது. ஆபத்துக்குத் தோஷமில்லை என்று கலப்புப் பாலைக் குழந்தைக்குப் புகட்ட எனக்குத் துணிவில்லை. ஆகவே திரும்பி வந்து சுகந்தி யிடம் பசும் பால் இல்லை என்றேன். ஆனால் அவள் மடியில் விஜியைக் காணோம். நிம்மதி யாகச் சாய்ந்து கொண்டு ஒய்வு எடுத்துக் கொண்டிருந்தாள் சுகந்தி. அடிப்பாவி! குழந்தையை என்ன செய்தாய்? என்று கேட்க வாயெடுத்தேன். எதிர்வரிசையில் அந்த இளம் பெண்ணின் மடியில் என் விஜி கிடந்ததைச் சுகந்தி சுட்டிக் காட்டினாள். வியப்புடன் அங்கே நோக்கினேன். அந்தப் பெண்ணின் சேலைத் தலைப்பினுள்ளே முகத்தை மறைத்துக்கொண்டு விஜி...

விவரிக்க முடியாத வியப்பும், சந்தேகமும் என்னை ஆட்கொண்டன. சுகந்தியின் காதரு கில் குனிந்து என்ன இது? என்றேன். அவள் மிக மிக ரகசியமாக "அவளுடைய குழந்தை நேற்றுத் தான் இறந்து போயிற்றாம். என்னிடம் கொடுங்கள் என்றாள். கொடுத் தேன் எடுத்துவிடுகிறாள்" என்றாள், மகிழ் வுடன். இறைவனின் எல்லையில்லாத விளை யாடல்களைக் கண்டும் கேட்டுமிருக்கிறேன். இது போன்ற விநோதத்தைப் பார்த்ததே யில்லை. தாய் உயிருடனிருந்தும் தாயில்லாக் குழந்தை போல் வளர்ந்த என் விஜிக்கு இன்னு மொரு தாயை அல்லவா இறைவன் அனுப்பி யிருக்கிறார்?

# உபாசிக விஹாரம் ★

"ஷேரலி"

ஈழக் கடலோரம்!

வசந்த ரம்மியமான மாலை நேரம்! சிலு சிலு வென்று இதமாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது!

'த்ஸோ' என்ற பேரிரைச்சலுடன் நீலத் திரைக் கடல் எக்காளமிட்டது. உலகத்தின் ஆசைகள் கோடி என்றும், அதில் அத்தனையும் ஈடேறி விடுவதில்லை என்றும நிரூபிப்பது போல், கரை நோக்கி ஓடி வந்த அதன் அலைகள் கரையேறாமல் தோல்வியை ஒப்புக் கொண்டு புறமுதுகிட்டன. இன்னும சில அலைகள் பாறையில் மோதிச் சிதறுண்டு தெரித்தது.

நீலநிறக் கடலில் கலமோட்டி மீளும் மீனவர் போல் பறவைகள் தம் சினை நோக்கிப் பறந்தன!

நிர்மலமான வானத்தில் வெண்முகிற் கூட்டங்கள் திட்டு திட்டாக இங்கு மங்கும் மிதந்தன! அந்த வெண்முகில்களும ஒன்றைப் பிடித்துத் தடவி விடுவது போல், அரசி 'அனுலா'வின் குஞ்சரத தடக்கை, பௌத்தருக்குப் புனிதமான அன்னப் பறவையை வருடிய வண்ண மிருந்தது! ஈழ மன்னன் தேவனும் பிரிய தீசனின் பட்டமகிஷி அல்லவா, அவளைச் சுற்றிலும் எட்டு நடைப் பரிவாரமும் இருந்தது. மேலும் அவளுக் கருகில் மாமன்னன் அசோகனின் மகள் சங்கமிததிரையும் இருந்தாள்!

மெலிந்த நெடிய தோற்றம்! ஒயிலான மாந்தளிர் மேனியில், நிலவைப் பிடித்து சிறு கரையைத் துடைத்து வதனமாக்கி வைததாற் போன்ற எடுப்பு! நீண்டவிழி மீண்டுவிடுமோ என அஞ்சி வில்லென புருவததை வளைத்து காவலென வைத்தாற் போன்ற நிலை! செம்பவள அதரததள முததைப பதித்து வைத்தாற் போன்ற பற்கள்! இத்தனையும் சேர்ந்து சங்கமிததிரையின அழகுக்கு அழகு செய்தது!

அவள் தன் கரிய கூந்தலைச் சீவி தலைமேல் முடித்து அதன் நுனியை பிரிபிரியாக தோளில் தொங்கவிட்ட கோலம் அவளுக்கு இன்னும் அழகு செய்தது! அவள் தன் பூப் போன்ற மேனியை சீவர ஆடையால் போர்த்தித் தன் வாலைப் பருவ வசந்தங்களையும், இளமையையும் யௌவனத்தையும் அழிப்பவள் போல் இருப்பினும் அந்தக் கோலம் அவளுக்குத் தனி சோபை கூட்டியது.

'உருவேலா'விலுள்ளபோதிமரக் கிளையோடு 'வேதுலியக் கொள்கை'யையும், இந்த ஈழ நாட்டில் வித்திட்டு வளக்க வந்த சங்க மித்திரையைக் கண்ட மாத்திரத்திலேயே மன்னன் தேவனும் பிரிய தீசனின் தம்பி மத்தபயனின் கண்கள் சுழன்றன. ஆடு நனைவதாக ஓநாய் வருத்தப் பட்ட கதை போல-அழகானவள் தன் அழகின் பலனை அனுபவிக்காமல் துறவு என்ற உறவிலே தன்னைத்தானே பாழடித்துக் கொள்கிறாளே என வருந்தினான்!

அனுராத புரத்தின் தெற்கில் உள்ள மகா மேகவன ஆராமாவின் தூப ஆராமாவை தரிசிக்க அன்று சங்க மித்திரை புறப்பட்ட போது துணை என்ற பெயரில் இணைந்து வந்து மத்தபயன் விட்ட சொற்கள் அவள் நெஞ்சைத் தொட்டு சுட்டன! எனவே தான், மாளிகையில் தங்கி இருப்பது ஆபத்து என அவள் கருதினாள்! தன் இருப்பிடத்தை மாற்றிக் கொள்வது நல்லது என நினைத்தாள்! அலை பாயும் கடலைப் போல் எண்ணிறந்த அலைகள் தன் நெஞ்சில் பாய கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். தேவனே என்னைக் கொஞ்சமும் களங்க மின்றி காப்பாற்று என்பதே அவள் எண்ண மெங்கும் ஒலியாக இருந்தது!

"என்ன ஒரேயடியாக மௌனமாக இருக்கிறீர்கள்" அரசி அனுலாவின் சொற்களைக் கேட்டு விழிப்புற்றாள் சங்க மித்திரை.

"ஒன்றுமில்லை! நான் என் இருப்பிடத்தை உபாசிகவிஹாரத்திற்கு மாற்றிக் கொள்ளலாம் என நினைக்கிறேன்; உங்களுக்குத் தடை யேதும் இல்லையே!" கனிவும் பணிவும் தொனியக் கூறினாள் சங்க மித்திரை!

“ஏன்—மாளிகையில் உங்களுக்கு வசதிக் குறைவாக இருக்கிறதா?” பதறினாள் அனுலா.

“இல்லவே இல்லை! போதி நாதரின் போதனைகளை தீட்சை பெறாத நிலையில் உபாசிக விஹாரத்தில் நிறைந்து கிடக்கும் பெண் துறவிகளுக்கு. துக்கம் துக்கோற்பத்தி, துக்க நிவர்த்தி, நிவர்த்தி மார்க்கம், ஆகிய அடிப்படையை ஆழப் போதித்து பரிநிர்வாண நிலையடைய வைத்தல் மட்டுமின்றி ஒவ்வொருவரையும் அரஹந்த ராக்கி இந்த உலகின் பல திக்கிலும் அனுப்பி வைத்து புத்த பள்ளி நடத்தச் செய்ய நினைக்கிறேன்”

ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்!

சங்கமித்திரையின் பரந்த நோக்கத்தை கண்ட அனுலா அப்படியே ஸ்தம்பித்தாள்! உள்ளம் புளகாங்கிதம் அடைந்தாள்! ஆனல் பொது நலத்துள் புதைப்பட்டுக் கிடக்கும், தற்காக்கும் சுயநலக் கொள்கை எங்கே அவளுக்குத் தெரியப் போகிறது.

சங்க மித்திரையிடம் அனுலா தீட்சை பெற்றாள்.

ஃ ஃ ஃ

இரவு நேரம்—

லேசாக தூரல் இருந்தது! காற்று விஸ் விஸ் என்று அடித்துக் கொண்டிருந்தது! முதல் ஜாமம் முடிந்து இரண்டாம் ஜாமமும் துவங்கிவிட்டது! சங்க மித்திரை உபாசிக விஹாரத்தில் தங்கி இருந்தாள்.

அகன்ற சதுரமான கூடம்! சுற்றிலும் தீபம் எரிந்து கொண்டிருந்தது. ததாகதரின் பூர்வப் பிறவிகளை சித்தரிக்கும அழகான ஓவியங்கள் கூடத்தின் சுற்றிலுமுள்ள சுவர்களில் தீட்டப் பட்டிருந்தது.

கூடத்தின் நடுவே போடப்பட்டிருந்த உயர்ந்த ஆசனத்தில், சங்கமித்திரை புலனடக்கம், உண்ணாவிரதம் போன்ற சாதாரணமானவர்களுக்கு விதிக்கப்பட்ட உபோசத விரதம் நோற்று ஸ்மரணையற்ற தியானமான நிரோதத்தில் இருந்தாள். கால் மேல் கால் போட்டு ‘யோகா’ முறையிலிருந்து இடதுகை தனது மடி மேல் வைத்து அதன் மேல் வலதுகை இட்டு கண்களை மூடியிருந்தாள்! புத்த பிரானின் எடுப்பான செளந்தரியமான ‘இருந்த’ கோலத் தோற்றம் அவளிடம் பிரதிபலித்தது. அவளுடைய எடுப்பான முகத்தில் பரிணமிக்கும் தெய்வீகம் யாவரையும் வசீகரிப்பதாயிருந்தது.

மத்த பயன் மெல்ல அடி மேல் அடி வைத்து உள்ளே நுழைந்தான்!

அவன் எதிர்பார்த்ததெல்லாம் சங்கமித்திரை ஆழ்ந்த நித்திரையில் இருப்பாள் என்பதுதான்! ஆனல் நிரோததிலிருக்கும் அவள் சொரூபததைக் கண்டு தடுமாறினன்! அப்படியே ஸ்தம்பிதது நின்றான்!

வெளியே மழை ‘ஸோ’ வெனப் பெய்தது! இடியும் மின்னலும் காற்றும் வீசி இயற்கையின் கோரதாண்டவத்தை காட்டியது.

அவன் இதயம் படபடத்தது! தலை சுற்றியது. மனததிரையில் பல மின்னற் கீற்றுக்கள் பளீச்சிட்டன! சுழன்று வந்த அவன் கண்களில் நிஷ்களங்கமான சங்கமித்திரை இருந்த இடத்தில புத்தரின் பரி நிர்வாண நிலை தோன்றியது! சூளாமணி சேதியத்திலிருந்து டாண் டாண் என்ற அன்பு நாதம கிளம்பியது! எட்டு சுபசித்திரமும் விரித்துவிடப்பட்டது. போன்ற உணர்வுகள! தேவகணஙகள் செய்யும கிண்கிணி ஒலி எழுந்தது! அத்துடன் புத்தம் சரணம் கச்சாமி என்று பலர் கூடி குரல் கொடுப்பது போலிருந்தது.

எல்லாம் ஒரு கணம்தான்!

மெல்ல எட்டின் மேல் எட்டு வைத்து அவளுக்கு எதிராக போடப் பட்டிருந்த கோரைத் தகடுகளில் அமர்ந்தான்!

ஃ ஃ ஃ

ஈழக்கடலோரம்!

வசந்தரம்மிய மான மாலை நேரம்! சிலுசிலு வென்று காற்று வீசிக்கொன்டிருந்தது!

த்ஸோ என்ற பேரிரைச்சலுடன் நீலத் திரைக் கடல் எக்காள மிட்டது! உலகத்தின் ஆசைகள் கோடி என்றும் அதில் அத்தனையும் ஈடேறி விடுவதில்லை என்று பெளத்த துறவி மத்த பயனுக்கு நிருபிப்பது போல் கரையேறுமல் தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பின. இன்னும் சில அலைகள் பாறையில் மோதிச் சிதருண்டுத் தெரித்தன!

துறவி மத்த பயன் கடலை வெறித்து நோக்கிய வண்ணம் நின்றிருந்தான்!



# அனிச்சப்பூ

## 10

“ கூடிப் பிரியாமலே—ஒரிராவெல்லாம்
கொஞ்சிக் குலவியங்கே
ஆடி விளையாடியே—உன்றன்மேனியை
ஆயிரம் கோடிமுறை
நாடித் தழுவிமனக்— குறைதீர்ந்துநான்
நல்ல களிஎய்தியே
பாடிப் பரவசமாய் நிற்கவேதவம்
பண்ணிய தில்லையடி”

—பாரதியார்.

**எழில்முதல்வன்**

மனம் என்பது கோடைக் காலத்து ஆறு போல வெறுமையாகவும் இருக்கும், மழைக் காலத்து வெள்ளம் போல நிறைவோடும் இருக்கும். அது தனி உலகம், மனிதன் பிற ரோடு பழகும் புற வாழ்க்கை எவ்வள வுக்கு விரிந்ததோ அதுபோல மனிதனுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பு விரிந்ததும், ஆழமான தும் ஆகும், இன்னும் சொன்னால் மனி தனது புற வாழ்க்கையையும் மாற்றியமைக் கும் ஆற்றல் மனத்திற்கு உண்டு. எனவே தான், காந்தியடிகள் போன்ற அறவோர்கள் புறஉலகைத் திருத்த முற்படுவதை விட ஒவ் வொருவரும் தன் அகமனத்தைத் திருத்திக் கொள்வது நல்லது என்ற முடிவுக்கு வந்தனர். அறிந்தோ, அறியாமலோ மனத்தை ஒன்றன் பால் நழுவ விட்டு விடும்போது அது விட்ட வழிக்கே நாம் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம், இளங்கோவின் மன உலகத்தில் கொஞ்ச நாட்களாகக் குமுறிக் கொண்டிருந்த பல நிகழ்ச்சிகளுக்கு இதுதான் காரணமாக வும் இருந்தது. இளங்கோ எழில்மதியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம், அவனுள்ளே ஏற்பட்ட உள்ள நெகிழ்ச்சியை அவனால் தடுத் துக்கொள்ள முடியவில்லை.

அன்று கல்லூரி விழாவில் அவள் ராகங் களை ஆலாபனம செய்யும்போது சுழல விட்ட படியே சுருள சுருளாகச் சங்கதிகளை அடுக் கிக் கொண்டே போய், மேல் பஞ்சமத்தைத் தொட்டதையும், சாரீரத்தை இழுத்த இழுப் புக்கெல்லாம் வளைந்து கொடுக்கச் செய்து, எட்டாத இடங்களை எல்லாம் அநாயாசமாகத் தொட்டுப், புதிது புதிதாகச் சங்கதிகளை உதிர்த்ததையும், மிகவும் கஷ்டமான மத்தி மஸ்ருதி கீர்த்தனைகளைக் கூட அவற்றின் பொருளும், ஆழமும் முழுமையாக வெளிப் படும்படி அற்புதமாகப்பாடியதையும், எண்ணி எண்ணி அந்தக் கலா தேவியைத் தன்மனக் கோயிலில் உபாச னைக்குரிய பிரதி மையாக ஆக்கிக் கொள்ள அவனது அந்தரங்க மனம் துடித்துக் கொண்டே இருந்தது. அந்த நினைவுகள் வளர்வதற்கேற்ப சில நிகழ்ச்சி களும் தாமாகவே அமைந்துவிட்டன.

ஒருநாள் கல்லூரி கேன்டீனுக்குமுன் எழில் மதியும் அவள் தோழி வசந்தியும் வந்து கொண்டிருந்தபோது அவன் அவளை ஏதோ ஒரு விஷயமாகச் சந்தித்துப் பேசியதும், அப் பொழுது அவள் அவனால் எழுதப்பட்டுக் கல்லூரி மேகசைனில் வெளிவந்திருந்த "உறங் கும் நினைவுகள்" என்ற கவிதையை வெகு வாகப் பாராட்டியதும் அவன் நினைவில் அடிக் கடி தோன்றின, தன்னால் எழுதப்பட்ட அந் தச் சாதாரணப் பாட்டுக்கு அவள் புதிய புதிய விளக்கங்கள் தந்து காலரிட்ஜின் கவிதை ஒன் றோடு ஒப்புமை காட்டியபோது அவன் தன் னுடைய படைப்பாற்றல் பெரியதா அல்லது அவளது ரசிகத்தனமை பெரியதா என்று அளவிட முடியாமல் தவித்திருக்கிறான். அவ ளால் பாராட்டப்பட்ட அந்தப் பாட்டு அவ னது அடிமனத்திலே உருவாவதற்குக் கார ணம் அவளேதான் என்று அவளுக்கு எப் படித் தெரியும்?

அரையாண்டுத் தேர்வு முடிந்து விடுமுறை துவங்கிய சமயம் அது, பேராசிரியர் அம்பல வாணர் தலைமையில் கங்கை கொண்ட சோழ புரத்திற்குச் சுற்றுலாச் சென்று வரவேண்டும் என்று ஏற்பாடாகியது, அச்சுற்றுலாக் குழு வில் எழில் மதியும் கலந்து கொண்டிருந்தாள், குறிப்பிட்ட தினத்தன்று சுற்றுலாக் குழு வினர் காலை எட்டு மணிக்கே தனியாக ஏற் பாடு செய்யப்பட்டிருந்த பேருந்து வண்டி யில் புறப்பட்டனர். அணைக்கரையை அவர் கள் அடைந்தபோது மணி ஒன்றாகி விட்டது. அவர்கள் ஏறிவந்த வண்டி இடையிலே வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டதால் வந்த வினை அது, அணைக்கரையிலேயே மதிய உணவினை முடித்துக்கொண்டு கார் சரியானவுடன் புறப் படுவோம் என்று தீர்மானித்ததால் எல்லோ ரும் காரைவிட்டு இறங்கினர்.

அணைக்கரை நல்ல இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடம், ஓடிவரும் கொள்ளிடம இரண் டாகப் பிரிந்து மீண்டும கூடுகின்ற ஆற்றிடைக் குறையில் அணைக்கரை அமைநதுள்ளது, ஊருக்கு மேற்கே உள்ள சோலையில எல்லோ ரும் போய் அமர்ந்தனர், அம்பல வாணர் வழி நெடுகத் திருவாசகம், திருக்கோவையார் போன்ற நூல்களில் இருந்து நல்ல நல்லபாடல் களை இசையோடு பாடி விளக்கம் கொடுததுக் கொண்டு வந்தார்.

அம்பல வாணர் தமிழைத் துறைபோகக் கற்றவர். அஷ்டாவதானம் பூவை கல்யாண சுந்தர யதீந்திரரிடம் பாடம்கேட்டவர், சைவப் பெரியார் நல்லசாமிப் பிள்ளை, வண்ணக் களஞ் சியம் நாகலிங்க முதலியார் முதலியோரிடம் நட்புகொண்டு ஒழுகியவர், அம்பலவாணருக்கு ஒற்றை நாடிச் சரீரம், திருவெண்ணீறு திகழும் நெற்றியும், தூய வெண்ணிற ஆடையுமாகக் காணப்படும் அவரது திருவோலக்கப் பொலி வும், வெண்கலக் கடையில் அரசுவா புகுந்தது போன்ற கம்பீரமான குரலும் மாணவர்களைத் தன் வயப்படுத்தும் தன்மையன, மாணவர்கள் அம்பலவாணரின் நகைச் சுவையும் கருத்துச் செறிவும் நிறைந்த பேச்சைச் சுவைத்துக் கேட்டுக்கொண்டே சோலைக்குள்வந்து அமர்ந் தனர். வண்டியில் கொண்டு வந்திருந்த சிற் றுண்டிப் பொட்டலங்களை ஒரு சில மாணவர் கள் எடுத்துக்கொண்டு வநதனர். "உண் டாட்டை ஆரம்பிக்கலாமே!" என்றார் பேரா சிரியர், மாணவர்கள் அரை வட்ட வடிவமாக உட்கார்ந்ததும், பொட்டலங்களை வழங்கும் பொறுப்பை எழில் மதியும், வசந்தியும் ஏற் றுக் கொண்டனர். பேராசிரியர் அவ்விரு வரையும் நோக்கி "எல்லோருக்கும் கொடுத்து விட்டு நீங்களும் எடுத்துக்கொண்டு உட்காருங் கள், சேர்ந்தே உண்ணுவோம்" என்றார்.

எழில்மதி முதலில் பேராசிரியருக்குப் பொட்டலங்களை வழங்கிவிட்டு வரிசையாக வந்தாள். நந்தனும் இளங்கோவும் மறுபுறத் தில் ஒரு கோடியில் அமர்ந்திருநதனர். இளங் கோவுககு நல்ல பசி, அவனது முகமெய்ப் பாடுகளிலிருந்து அதை உய்த்துணர்ந்து கொண்ட பேராசிரியர் "எழில்மதி ... இளங் கோவுக்கு முதல்லே கொடு. பாவம், பசியா இருக்கான், நீ உடனடியாக கொடுக்காட்டா அவன் இப்ப இருக்கிற நிலைக்கு உன்மீது வசைப்புராணம் பாடி எரித்தாலும் எரித்து விடுவான்" என்று வேடிக்கைக்காகக் குறிப்பிட் டார்.

அதற்குள் நந்தன் குறுக்கிட்டு, "ஆமாம் ஐயா, காளமேகப் புலவன் மாதிரி வசைபாட ஆரம்பிச்சுட்டா வம்பு ...இளங்கோவுக்கு எப் போதுமே பொறுமை சற்றுக் குறைவு.நீஙகள் சொல்வது சரிதான் ஐயா" என்றான்.

மற்றொரு மாணவன் "நந்திக் கலம்பகத் தால் மாண்ட கனத நாடறியும், இங்கேயும் அப்படி ஆனாலும் ஆயிடும்" என்றான். இதைக்

கேட்டதும் மாணவர்கள் எல்லோரும் 'குபீர்' என்று சிரித்தனர். அதுகண்ட எழில்மதி "ஐயா, அவருடைய பாட்டு கிடைப்பதாக இருந்தால் நான் தாமதம் தான் செய்யப் போறேன், கொஞ்சம் அவரை பசிக்க விட்டு விட்டுப் பாட்டைத்தான் கேட்போமே!" என்றாள் நந்தனும் அதை ஆமோதிப்பவன் போல "ஆமாம், இளங்கோவுக்குக் கொடுக்காதீர்கள், கொடுத்துவிட்டால் நமக்கெல்லாம் பாட்டு கிடைக்காது" என்றான்.

இளங்கோ சிரித்துக்கொண்டே "போதும்! போதும்! எல்லோரும் ஒரேயடியாப் புகழ்ந்து தள்ளுகிறீர்கள், உங்கள் பேச்சுத் தான் இப்பொழுது பாட்டாக இருக்கிறது" என்றான், பேராசிரியர் அவனை நோக்கி "இளங்கோ.... பழைய தமிழிலே உலா என்று ஒரு பிரபந்த வகை உண்டல்லவா? நீயும் ஒரு புதுமையான உலா வேண்டுமானால் பாடு. 'அணைக்கரை உலா' என்று பெயர் வைத்துக் கொள்" என்றார்.

பிறகு மதிய உணவை முடித்துக்கொண்டு புறப்பட்டனர், பழுதடைந்திருந்த பேருந்து வண்டியும் அதற்குள் சரியாகிவிட்டது எல்லோரும இரண்டு மணியளவில் கங்கை கொண்ட சோழபுரத்தை அடைந்தனர். கங்கை கொண்ட சோழபுரம் தமிழர்களின் சிற்பக்கலைக்குப் பேர்போன இடம், சோழப் பேரரசன் இராஜேந்திரனால் கட்டப்பட்டது அது, அங்குள்ள கோயில், விமானத்திலும, வெளிப்புறததிலும், காணும் சிற்பங்களைக் காட்டிலும் உயர்ந்த சிற்பங்கள் தெனனிநதியாவில் மட்டும் அல்ல—தென்னிந்தியக் கலையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட சாவகக் கலையிலும் இல்லை என்பதை மாணவர்கட்குத் தக்க ஆதாரங்களோடு விளக்கிக்காட்டிக் கொண்டே வந்தார் அம்பலவாணர், எழில்மதி நந்தனிடமும, இளங்கோவிடமும் அச்சிற்பக் கலையை வியநது பேசிக்கொண்டே வநதாள். இரண்டு மூன்று மாதஙகளுக்கு முன்னர் நடநத இந்த நிகழ்ச்சி இளங்கோவின் மனத்தில் பசுமை மாறாமலே இருந்து வந்தது.

"அவள் தெய்வீகக் கலையின் பிரதிபிம்பம்; அழகின் பிழம்பு அவளை நான் நேசிக்கிறேன் என்பது என்னவோ உண்மை தான், ஆனால் நான் அவள் மேல் கொண்டிருக்கும் அந்த அன்பிற்கு உலகத்தார் சொல்லுகின்றவெறும் 'காதல்' என்ற பெயரை நான் கொடுக்க விரும்பவில்லை, என் அன்பு அந்தக்காதலினும் உயர்ந்தது' என்றே அவன் மனம் எண்ணியது. அவனது கலை மனம் அவளிடத்திலே தன் உணர்ச்சிகளைக் கொட்டிக் காட்டவும், நெஞ்சத்தைத் திறந்து காட்டவும், துடித்துக் கொண்டே இருந்தது.

அன்பு உணர்ச்சி என்பதும், காதல் என்பதும் ஒவ்வொரு வரிடத்தும் இருக்கக் கூடியதுதான் என்றாலும் ஒருவனுக்கு எல்லோர் மீதும் அன்போ, காதலோ ஏற்பட்டு விடுவதில்லை. ஒவ்வொரு மனிதனுடைய அன்புணர்வும் சில குறிப்பிட்ட மனிதர்களிடம் அன்புலத்தின் விந்தைகளில் இதுவும் ஒன்று.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன, தேர்வுக் காலம் ஆனதால் கல்லூரி விடுதியில் மயான அமைதியே சூழ்ந்திருந்தது. ஒவ்வொருவரும் நடந்துகொண்டிருக்கிற முழு ஆண்டுத் தேர்வுக்காக முழு மூச்சுடன் படித்துக் கொண்டிருந்தனர்.

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் தேர்வு முடிந்து கோடைவிடுமுறைதுவங்கிவிடும். பின் அடுததநடப்புஆண்டில்தான் பிரிநதுபோகும் நண்பர்கள் சநதிக்க முடியும். இடையே உள்ள இரண்டு மூன்று மாதங்கள் என்பது மிகப்பெரிய இடைவெளியாக இருப்பதுபோல் உணர்நதான் அதற்குள் எழில்மதியிடம் தன் உள்ளத்தைப் புரியவைத்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டவனாகக் காணப் பட்டான், பொஙகிவரும் உணர்வுகளை எவ்வளவ தடுத்தாலும் சில சமயங்களில ஒவ்வொரு மனிதனும் அதற்கு ஆட்பட்டே விடுகிறான். உண்மையான பசி இருக்கும்போது சுவையைப் பற்றிய ஆராய்ச்சி எப்படிப் பிறப்பதில்லையோ அதுபோல மனிதனும் உணர்வு வயப்பட்ட நிலையில், தான் செயயும் செயல் நல்லதா கெட்டதா என்று எணணிப் பார்ப்பதில்லை: அந்த நேரததில் மனிதனுடைய நியாய அறிவு மங்கித்தான் போய்விடுகிறது.

ஒருநாள் இரவு முழுதும் சிந்தித்துச் சிந்திதது, வார்த்தைகளைத தேடித் தேடி அலைந்து எப்படியோ ஒரு வழியாகக் கடிதத்தை எழுதி முடித்தான். முதற்கண் கடிதத்தில் அவளை எபபடி விளிப்பது என்பதற்கே ஒரு மணி நேரம் சிநதித்தான். இடையில் ஓரிடத்தில் காற்புள்ளி ஒன்றைப் போடலாமா என்று நெடுநேரம் எண்ணி அதைப் போட்டான்;

பின் போட்டது சரிதானு என்று நெடுநேரம் எண்ணி அதை அடித்தான், அப்படியும் தான் எண்ணிய அனைத்தையும் வெளிப்படுத்திவிட்டோம் என்ற உளநிறைவு அவனுக்கு வரவே இல்லை. அர்த்த புஷ்டி உடைய சொற்களாகப் பொறுக்கி எடுத்துப் போட்டாலும் பல சமயங்களில் மொழிமேலேயே மிதக்கும் தாண்டிலாக இருக்கிறதே அன்றி ஆழத்தைச் சென்று தொடும் நங்கூரமாக இருப்பதில்லை. உணர்வுகளோடு ஒப்பிடும் போதுதான் பாஷையின் பலஹீனம் தெரிகிறது!

இளங்கோ தன் மனத்தை ஒருநிலைப்படுத்த முடியாதவனுக எழுதிய கடிதத்தை அஞ்சலிலும் சேர்த்துவிட்டான். உணர்ச்சியால் உந்தப்பட்ட நிலையில் ஒரு பக்கத்து மனம் குறுக்கே நின்று தடுக்க, மறுபக்கத்து மனம் அவனது உள்ளத்தைத் தூண்ட, எழுதி முடித்த அஞ்சலை எடுத்துப்போய் தாலுக்கா ஆபீஸ் காம்பவுண்டிற்குள் இருக்கும் அஞ்சற் பெட்டியில் சேர்த்த பிறகுதான் அவன் மனம் ஒரு நிலைப்பட்டது. அதற்குப் பிறகு அந்த அமைதியும் வெகுநேரம் நீடிக்கவில்லை. பிறகு தான் செய்தது சரியல்ல என்பதை உணர்ந்தான். ஒருவன் தன்னைத்தானே பிறருடைய கண் கொண்டுப் பார்த்துக் கொள்ளும்போது தான் தன் குற்றத்தை உணர்கிறுன்.

கடிதத்தில் தன் அன்பை எடுத்துக் காட்டித், தேர்வின் இறுதிநாள் அன்று அவளைத் தனிமையில் சந்தித்துப் பேச விழைவதாகவும் குறிப்பிட்டிருந்தான். அதுமட்டுமன்றி கடிதத்தின் இறுதியில்

"கூடிப் பிரியாமலே...."

என்ற பாரதியின் பாட்டையும் மேற்கோள் காட்டி முடித்திருந்தான் அவனுல் எழுதப்பட்ட அந்தக் கடிதம் புனிதமான மன உணர்வுகளோடு எழுதப்பட்டது என்றே கருதினுலும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் மேற்கோள் காட்டப்பட்ட அந்தப் பாடலை எண்ணிப் பார்க்கும்போது அதில் ஏதோ ஒரு தாழ்ந்த உணர்வும் தலைகாட்டிவிட்டது போல அறிந்து தவியாய்த் தவித்தான். தன் கடிதத்தைப் படித்துத் தன் தூய அன்பை உணருகின்ற நிலையில் அந்தப் பாட்டையும் படித்துவிட்டுத் தன்னைப்பற்றி என்ன நினைப்பாள் என்று எண்ணிப் பார்த்தபோது அவன் தன் கைகளால் தலையில் அடித்துக் கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய அவனுக்குத் தோன்றவில்லை உண்மையான அன்பில் உடற் கவர்ச்சியும் ஓரளவு இருக்கத்தான் செய்யுமோ என்னவோ!

"எழில்மதி ஒரு கவிஞன் என்ற அளவில் என்மீது மதிப்பு வைத்திருப்பாளே! நான் அசட்டுத் தனத்தால் எழுதி அனுப்பிய அந்தக் கடிதத்தைப் பார்க்கும்போது அவள் என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? அவளுடைய அன்பை முற்றும் இழபபதற்கு இந்தக் கடிதமே காரணமாக அமைந்துவிட்டால்..." அதற்குமேல் அவனுல் எண்ணிப்பார்க்க முடியவில்லை. நினைத்து நினைத்துக் குமுறினுன்.

அந்தச் சமயத்தில் தங்க அரளிப் பூப்போன்ற அவளது பாதங்கள் நினைவுக்கு வந்தன. சிவந்து தோன்றும் அவளது சீறடிகளைத் தன் தலையிலே தாங்கிக்கொண்டு, "எழில்மதி .. என்னை உன்பால் ஆகர்ஷித்துக் கொண்டிருக்கும் அது என்ன? என்ன? என்று எண்ணிப் பார்த்துவிட்டேன்; என்னுல் உணரவே முடியவில்லை. விட்டகுறை—தொட்டகுறை என்று உலகத்தார் சொல்கிருர்களே! அதுதானே என்னவோ, உன்னுடைய அன்பை எண்ணி ஏங்கும் இந்த ஏழைக்கு உன் நெஞ்சததில் ஒரு மூலையில் இடம் கொடுத்துட்டாய் ஆனுல் நான் ஜென்ம சாபல்யம் அடைந்துவிடுவேன்" என்று கூறி இரந்து நிற்க வேண்டும்போல் தோன்றியது.

நிறைவேருத நிராசையோடு, தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுவிட்ட இந்த அனுபவத்தில் தன்னை இழந்தவனுகவும், படிப்பிலே தன் முழுக் கவனததையும செலுத்த முடியாதவனுகவும் நடைப் பிணம் போல உலவிக்கொண்டிருநதான் இளங்கோ, கொஞ்ச நாட்களாகவே சுற்றுப்புறச் சூழ்நிலை, நண்பர்கள், எல்லாவற்றையும மறநது படிப்பிலே தன் கவனத்தைச் செலுததத முயன்றும், அவ்வாறு முடியாத நிலையில், அவன் இருந்தான் என்பதை அவனேடு நெருங்கிப் பழகும் ஒரு சில நண்பர்களே அறிந்திருந்தனர். அவர்களுக்கும் அதன் காரணம் என்ன என்று தெரியாது. தேர்வு நெருக்கடியில் தெரிந்து கொள்ளக் கூடிய மனநிலையிலும் அவர்கள் இல்லை. வற்புறுத்திக் கேட்ட சில ரிடத்தும் இளங்கோ ஒன்றும் மனம் திறந்து சொல்லவில்லை.

முன்னமேயே அவனது உள்ளத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்த இந்தக் காரணம் மட்டும் அன்றிப் புதிய ஒரு காரணமும் வந்து சேர்ந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் கிராமத்திலுள்ள தன் தாயிடம் இருந்து கடிதம் வந்தது "அப்பாவுக்கு உடல்நிலை மோசமாக இருக்கிறது. நம்பிக்கை இழந்திருக்கிறேன். கவலைப்படாமல் படித்து வா" என்று கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அரையாண்டுத் தேர்வு முடிந்து விடுமுறையில் ஊருக்குச் சென்றிருந்தபோது தந்தையார் மெலிந்துபோய் இருந்ததை அவன் கண்டான். தாயிடம் இருந்து கடிதம் வந்தது முதல் அவனுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை.

அவன் இதுவரைத் தன் வாழ்க்கையில் அவலத்தின் நிழலைத்தான் கண்டிருந்தானேயன்றி, இன்பத்தின் சாயலைக்கூடக் கண்டதில்லை. தனக்குள்ள பல கவலைகளையும் உள்ளுக்குள் மறைத்துக் கொண்டு அவன் புன்னகை பூக்க முற்பட்டாலும் அவன் அந்த முயற்சியிலே தோற்றுக்கொண்டே இருந்தான். எப்பொழுதும் சிந்தனை தேங்கிய முகத்தோடும், எதிலுமே பிடிப்பற்ற நிலையிலும் இருந்த அவனை அவனது நண்பர்கள் சிலர் "இவன் பித்தகோரசாக இருக்கிறானே" என்று சொல்வதுண்டு. பித்தகோரஸ் என்ற அறிவியல் அறிஞர் ஒரு முறை சூரிய ஒளியிலே குளிர் காய்ந்து கொண்டிருந்தாராம். அவரை ஒருவன் அணுகி 'ஐயா, தங்களைப்பற்றி நான் நிறையக் கேள்விபபட்டிருக்கிறேன். என்னால் உங்களுக்கு ஏதேனும் உதவ முடிந்தது என்றால் செய்கிறேன். உங்களுக்கு என்ன உதவி வேண்டும்' என்று கேட்டானாம். உடனே பித்தகோரஸ் 'ஒரு உதவியும் நீ செய்யவேண்டாம். சூரியனின் ஒளியை மறைக்காமல் அப்பால் போ; அது போதும் என்றாராம். இந்த நிகழ்ச்சியை மனத்தில் வைத்துக் கொண்டே இளங்கோவை அவர்கள் வேடிக்கையாக அங்ஙனம் கூறுவது வழக்கம்.

இளங்கோ மேஜைமீதிருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒன்றன்பின் ஒன்றாக ஐந்தாறு துண்டுகளை ஊதித் தள்ளிவிட்டுக் கையை மடக்கி மேஜைமீது வைத்துத் தலையைக் கவிழ்த்துக்கொண்டான். கொஞ்ச நாட்களாகப் புகை பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடவேண்டும் என்றுதான் நினைத்திருந்தான். ஆனாலும் அவலக் கவலைகள் நெஞ்சில் படரும்போது, அதை மறக்க அவன் அதன் துணையை நாடவே தொடங்கினான்.

தேர்வை எழுதி முடித்துவிட்டு நாளைக்கே ஊருக்குப் புறப்படவேண்டும் என்று எண்ணியவனாய்ப் புத்தகத்தை மூடி. விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான். ஆனால் தூக்கம் வருவதாக இல்லை.

இளங்கோ எப்படிப் பொங்கி எழும் விசித்திர நினைவுகளால் படிக்க முடியாமலும், தூக்கத்தைப் பிடிக்க முடியாமலும் தவிக்கிறானோ அதே வகையில் அவர்சார்பாக வேறு இரண்டு நெஞ்சங்கள் அவனை எண்ணித் துன்பத்தில் உழன்றுகொண்டிருந்தன. ஒன்று நந்தன்; மற்றொன்று எழில்மதி. இம் மூன்று பேரையும் மூன்று புள்ளிகளாகக் கொண்டு உருவாகி இருந்த அந்த முக்கோணக் கட்டத்திற்குள் உலகத்தில் உள்ள அத்தனை இன்ப துன்பங்களும், ஆசாபாசங்களும் நிரம்பியிருந்தன என்றே சொல்லலாம்

# 11

கேட்டினும் உண்டோர் உறுதி; கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

—திருக்குறள்

காலையில் விடிந்ததும் விடியாததுமாக எல்லாக் கடன்களையும முடித்துக்கொண்டு ஏழு மணிக்கே கல்லூரிக்குப் புறப்பட்ட நந்தன் அன்றைய் தேர்வை எப்படியாவது எழுதிவிடலாம் என்று நம்பினான். இரவு முழுதும், இளங்கோவைப் பற்றியும், அவனது எதிர்காலத்தைப் பற்றியுமே சிந்தித்துக்கொண்டிருந்த அவன் காலையில் தந்தியை எடுத்துப் பையில் வைத்துக்கொண்டான். இளங்கோவிடத்தில் செய்தியை எப்படி வெளிப்படுத்துவது, பின் அவனை எப்படித் தேற்றுவது என்று அவனுக்குப் புரியவே இல்லை. இளங்கோ தன்னுடைய தந்தையார் இறந்துவிட்டார் என்ற அந்தத் தந்தியைக் கண்டால் பதறித் துடித்துக்கொண்டே உடனே புறப்படக்கூடும். அப்படிப் புறப்பட்டால் எஞ்சிய தேர்வை எழுத முடியாமல் அதன் மூலம் எதிர்காலத்தையே இருண்டதாக ஆக்கிக்கொள்ள நேரிடும் என்று நந்தன் உணர்ந்ததா

லேயே முதல் நாள் தந்தியைப் பெற்றதும் இளங்கோவிடம் கொடுக்காமலேயே எடுத்துக் கொண்டு சென்றுவிட்டான். அவனுடைய அந்தச் செயல் எந்த அளவுக்குச் சரி என்பதை அவனாலேயே முடிவு செய்ய முடியவில்லை. எப்படியோ நடந்தது நடந்துவிட்டது; இனி நடப்பவையாவது நல்லவையாக அமைபட்டும் என்ற எண்ணமே அவன்பால் ஓங்கி நின்றது. அத்துயரச் செய்தியை அவனாலேயே தாங்கிக்கொள்ள முடியவில்லை. வறுமையோடும், உள்ளப் போராட்டத்தோடும் வாழ்ந்துகொண்டிருக்கிற இளங்கோவுக்கு இப்படி ஒரு பேரதிர்ச்சி வரும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. தன்னாலேயே தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இளங்கோவின் நெஞ்சம் என்ன பாடுபடும் என்பதை அவன் எண்ணி எண்ணி இரவு முழுதும் புழுப்போலத் துடித்தான். இந்தத் தந்தி மறுநாள் அவனுக்குக் கிடைப்பதன் மூலம் காலம்தான் தாமதமாகிறதேயன்றி அவனது எதிர்காலம் பாதிக்கப்படாது என்று பூரணமாக நம்பினான். எனவே தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகட்டும் என்பதுபோல வந்த துன்பம் தன்னையின் மரணத்தோடேயே முடிந்துவிடட்டும்; இளங்கோவின் வாழ்க்கையையும் பாதிக்கவேண்டாம் என்ற தீர்க்கமான முடிவிலேயே அவன் தந்தியை மறைத்ததில் தவறில்லை எனத் தனக்குள்ளேயே சமாதானம் சொல்லிக்கொண்டான்.

நந்தன் தந்தியோடு விடுதிக்கு வந்தபோது இளங்கோ தன்னை மறந்த நிலையில், சுயநினைவற்றுப் படுக்கையில் கிடையாகக் கிடந்தான். மற்ற நண்பர்கள் அவன் இரவு முழுதும் தூங்கவே இல்லை என்றும், ஏதோ பைத்தியம் பிடித்தவன்போல விரக்தியோடு சிந்தித்துக் கொண்டிருந்தான் என்றும், விடியற்காலம் சற்றுக் கண்ணயர்ந்திருந்தபோது ஏதோ பயங்கரமான கனவு கண்டு அலறித் துடித்துக் கொண்டு எழுந்ததாகவும், அதுமுதல் வாந்தி, மயக்கம் முதலியவற்றால் நினைவிழந்து இருக்கின்றான் என்றும் அறிந்துகொண்டான். டாக்டர் வந்து பார்த்துவிட்டு "உடலுக்கு ஒன்றும் இல்லை; ஏதோ மனக்கோளாறு. கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொண்டால் சரியாகிவிடும" என்று சொல்லிவிட்டுப் போனதாக பக்கத்து அறை நண்பர் கூறினர்.

நந்தன், இளங்கோவின் பக்கத்தில் உட்கார்ந்து அவனது நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். லேசான வெப்பம் இருந்தது. போர்வையை இழுத்துப் போர்த்தி விட்டுவிட்டு 'இளங்கோ', 'இளங்கோ' என மெல்ல அழைத்தான். திடுக்கிட்ட அவன் கண்களைத் திறந்து, மிரண்டு நோக்கியபடியே அவனது கரத்தை எடுத்துத் தன் மார்போடு வைத்துக் கொண்டான். நந்தன் கண்ணின் கடையோரத்தில் துளிர்த்த கண்ணீரை அவன் அறியாதபடி துடைத்துக்கொண்டு கவலைப்படாதே.... எல்லாம் உடலுக்கு ஒன்றுமில்லை. இன்று தேர்வு எழுதிவிடு. எழுதியவுடன் மத்தியானரயிலுக்கே ஊருக்குப் புறப்பட்டுவிடலாம்" என்று ஆறுதல் கூறினான்.

"நந்தா...எனக்கு ஏதோ ஒரு பெரிய தீங்கு வந்துவிட்டது போல உணர்கிறேன்" என்றான்.

" அலட்டிக்கொள்ளாதே...ஒன்றும் ஏற்பட்டுவிடாது...நீ தேர்வை எப்படியும் எழுதிவிடு"

இன்னும் அந்த ரகசியத்தை இளங்கோவுக்குத் தெரிவிக்காமல் மறைத்துப் பேசவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதற்கு நந்தன் வருந்தினான். பிறருடைய ரகசியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை எவ்வளவு நாணயமற்றதோ அதே போலச் சில ரகசியங்களைச் சிலரிடத்துச் சொல்லாமல் மூடி மறைப்பதும் நாணயக் குறைவான செயல்தான் என்று கருதிக்கொண்டான். வெண்ணெய் திரளுகின்ற நேரத்தில் தாழியை உடைப்பது போல இந்த நேரத்தில்—செவ்வி அறியாமல்-சொல்லிவிடுவது தவறு என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக்கொண்டான்.

இளங்கோவை எதுவும் கேட்காமலேயே எல்லாச் சாமான்களையும் எடுத்து ஒழுங்குபடுத்தினான், படுக்கை முதலியவற்றைக் ஹோல்டாலில் எடுத்துச் சுற்றினான். தேர்வு முடிந்தவுடன் உடனே புறப்படுவதற்கு ஏற்ற வகையில் வண்டி ஒன்றிற்கும் ஏற்பாடு செய்தான். விடுதித் துணைக் காவலரை அணுகி இளங்கோவை ஊருக்கு அனுப்ப அனுமதியும் வாங்கிக்கொண்டான்.

நந்தனைக் கண்டது முதல் இளங்கோ உடல் நிலை தேறியவன்போல பழைய நிலையில் காணப்பட்டான். நண்பனின் பிரிவும், அன்புமொழி

களும் அவனுக்குப் புத்துணர்ச்சி அளித்தன. படுக்கையை விட்டு எழுந்து, முகம் கழுவிக் கொண்டு, கொஞ்சம் காப்பியை மட்டும் அருந்திவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டான். "இளங்கோ நீ தேர்வை எழுதிவிடு ..உனக்கு நிச்சயம் வெற்றி கிட்டிவிடும். இன்றைக்கே ஊருக்குபோய் ஆகவேண்டியவற்றைப் பார்த்துவிட்டு அமைதியாக ஓய்வு எடுத்துக்கொள்'' என்று இளங்கோ மறுக்கவில்லை. மணி ஒன்பது அடித்தது. "மனிதனுடைய வாழ்க்கை என்பது கடிகாரத்தின் பெண்டுலத்தைப் போன்றது. இன்பம் துன்பம் என்ற இரு பக்கங்களுக்கும் அது மாறி மாறிப் போய்க் கொண்டே இருக்கும்'' என்று பலப்பல கருத்துக்களை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தான் நந்தன்.

''டேய்...உனக்கும் இன்று தேர்வு உண்டே, நீ என்னோடேயே இருக்கியே, படிக்கவில்லையா ?'' என்றான் இளங்கோ

"தேர்வு கிடக்கட்டும்; அதற்கென்ன, நான் முன்பே எல்லாவற்றையும் ஒரு வழியாகப் பார்த்து முடித்து விட்டேன்."

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது, நந்தன் இளங்கோவை அழைத்துக் கொண்டு, வழி நெடுக ஆறுதல் சொல்லிக் கொண்டே வந்தான், தேர்வு எழுதும் அறைவரை அவனைக் கொண்டுபோய் விட்டு விட்டுப் பிறகு தான் தேர்வு எழுத வேண்டிய அறையை நோக்கி விரைந்தான்.

தேர்வு முடிந்தது, தன்னைச் சமாளித்துக் கொண்டு.எப்படியோ எழுதிவிட்டு இளங்கோ ஹாலைவிட்டு வெளியே வந்தபோது தன் வருகைக்காக நந்தன் காத்துக்கொண் டிருப்பது தெரிந்தது, விடுதியை அடைந்ததும் சற்று உடல் நிலை செம்மையடைந்திருப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது. நந்தனே அவனைக் கொஞ்ச நேரம் கூட உட்கார விடாதவனாகக் 'கிளம்பு'—'கிளம்பு' என்று துரிதப்படுத்தினான், "மாலை 3-30க்கு வண்டி புறப்பட்டு விடும். நீ எப்படியும் உங்கள் கிராமத்திற்கு இரவு எட்டு மணிக்குப் போய்விடலாம். நான் வண்டிக்குச் சொல்லிவிட்டேன். வந்துவிடும், நீ த்யாராகு'' என்று அவன் கூறியபோது "ஏன் தான் இப்படித் துடிக்கிறானோ?'' என்று இளங்கோ எண்ணிக் கொண்டான், அப்பொழுதுதான் எழில்மதிக்குத் தான் சந்திக்க விழைவதாகக் கடிதம் எழுதியதும், ஒருவேளை அவள் காத்துக்கொண் டிருப்பாளோ என்ற ஐயமும் மனத்தில் தோன்றின. ஆனால் குழம்பிப் போயிருந்த மனநிலையில் எதையுமே தீர யோசிக்காமல் நந்தனுடன் புறப்பட்டான்.

ஒற்றை மாட்டு வண்டி மூலம் புகைவண்டி நிலையத்திற்கு இருவரும் வந்தபோது வண்டி புறப்பட இன்னும் அரை மணிக்குமேல் இருந்தது.

"இன்னும் டிக்கெட் வாங்கவில்லையே'' என்றான் இளங்கோ.

"வா, நான் நேற்றே ரிசர்வ் செய்துவிட்டேன்.''

இளங்கோவுக்கு அந்தப் பதில் திகைப்பாக இருந்தாலும், அந்தத் திகைப்பைத் தெளிவு செய்து கொள்வதற்கு இடம் கொடுக்காதவன் போல நந்தன்பெட்டி, படுக்கைகளைப் போர்ட்டர் மூலம் வண்டியில் ஏற்றி வைப்பதில் ஈடுபட்டிருந்தான்.

இறுதியில் நந்தன் அவனைத் தனி இடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றான். அவனது கைகளைப் பிடித்துக கொண்டு செய்தியை எடுத்துக் கூறி "நான் வருகின்ற வரை சடலத்தை எடுக்க வேண்டாம்—என நீ கொடுப்பது போல நானே தந்தி கொடுத்து விட்டேன, நீ போன பிறகு தான் எல்லாம் நடக்கும்'' என்றான். அதற்கு மேல் அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. நாத் தழுதழுத்தது. இளங்கோ, நநதனின் தோளில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டு விசித்து விசித்து அழுதான்.

அவனது உடலின நடுக்கத்தைக் கண்ட நந்தன் அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "அழாதேடா.... நடந்தது நடந்து விட்டது இனி நடக்க வேண்டியதைக் கவனி; இந்தா, பணம், நூறு ரூபாய் இருக்கிறது செலவுக்கு வைத்துக் கொள்'' என்று கூறி ரூபாய் நோட்டுகளை அவனது சட்டைப் பையில் செருகினான்.

"நான் துர்ப்பாக்கியசாலியடா நந்தா...''

"இதோ, இங்கே பாரு, சொல்வதைக் கேளு.... அழறதினாலே எதுவும் வந்திடாது... உம்'' என்று கூறி அவனது தலையை

நிமிர்த்திக் கண்களைத் துடைத்து விட்டான். பின், "இது ஸ்டேஷன், உனக்கே நல்லாருக்கா.... இப்படியா இங்கே அழுவது" என்று கூறி அவனைக் கைப்பிடியாக அழைத்துச் சென்று பெட்டியில் உட்கார வைத்தான். அது இரண்டாம் வகுப்புப் பெட்டி, வேறு யாருமே இல்லை. "இளங்கோ ... நான் உனக்கு வந்த தந்தியை உடனடியாக உன்னிடத்திலே கொடுக்காதது ஒரு விதத்தில் தப்புதானடா.. என்னை மன்னிச்சுடு" என்று கண் கலங்கக் கூறினான் நந்தன்.

அவன் இவ்வாறு பேசுவதைக் கேட்டதும் இளங்கோ தன்னைச் சமாளித்துக் கொண்டவனாய் "அப்படி ஒன்றும் நான் நினைக்கவே இல்லை....தயவு செய்து இப்படி எல்லாம் பேசாதே....என் தெய்வமடா நீ" என்று கூறி விட்டு பொல பொல வென்று கண்ணீர் வடித்தான்.

"பார், பாக்கெட்டில் பணம் இருக்கிறது. பத்திரமாய் எடுத்து வைத்துக் கொள். நான் எஞ்சியிருக்கிற தேர்வை எழுதி முடித்தவுடன் வருகிறேன்" என்றான் நந்தன.

கார்டு விசில் ஊதினான்; ஸ்டேஷனில் தேங்கி வழிந்த ஜனக் கூட்டம் ஏதோ முடுக்கி விட்ட இயந்திரம் போல இயங்கிக் கொண்டே இருந்தது. எத்தனையோ முன்பின் பார்த்தறியாத முகங்கள் பரபரப்போடு ஆயிரக் கணக்கில் நிமிஷத்துக்கு ஒரு அலையாய சங்கமமாகிக் கரைந்து கொண்டிருந்த அந்த இயந்திர இயக்கத்தில் தான் துன்பம், மகிழ்ச்சி, வரவேற்பு, பிரிவு என்று எத்தனை எத்தனை ரசமான காட்சிகள். "போய்ட்டு வா, கடுதாசி போட மறக்காதே" "உடம்பை பார்த்துக்கோ" "எங்கே, அப்பாவுக்கு டாட்டா சொல்லு" "ஹலோ, இப்பதான வர்ரீங்களா" "மை பெஸ்ட் விஷஸ்" — என்பன போன்ற எத்தனை எத்தனை பாஷா விநோதங்கள். உலகத்தை பாதியளவாவது ஒருவன் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் இந்த ரயில் நிலையத்தில் மௌனமாகக் கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தால் போதும் போதும்!

கார்டின் விசில் இரண்டாம் முறையாகக் கேட்டது. கீழே நின்று கொண்டிருந்தவர்கள் பரக்க பரக்க மேலே ஏறிக் கொண்டனர். நின்று கொண்டிருந்த எஞ்சின் ஒரு பெரிய பெருமூச்சு விட்டவாறு தன் பூதாகரமான உடலை மெல்ல அசைத்தது. பத்திரிகை விற்கும் பையன் ஒருவனும், பழ வியாபாரிகளும் தம் தொழிலின் பொருட்டுத் தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தனர்.

இளங்கோ ஈரமாகி இருந்த தன் விழிகளைத் துடைத்துக் கொண்டே நந்தனை நோக்கினான். இளங்கோவின் அழுத்தமான பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டே "போய் வா....கவலைப் படாதே....பிறகு நான் வர்றேன்" என்றான். வண்டி நகருகின்ற வரை இளங்கோ அவன் கரங்களை விடாதவனாக மௌனமாகச் சமைந்தான்.

விழிகளில் நீர்த் திரையிட்டது. வண்டி தன் பார்வையிலிருந்து மறைகின்ற வரை நின்று பார்த்துக் கொண்டே நந்தன் பெருமூச்சோடு திரும்பினான்.

## 12

செந்தமிழின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனம் என்றுரோ தடவினா—செந்தமிழை
ஆய்கின்ற கோன் நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மீது.

—நந்திக் கலம்பகம்

தேர்வு முடிந்து கோடை விடுமுறை துவங்கி ஒரு வாரத்திற்கு மேல் ஆகி விட்டது விடுமுறை ஆரம்பித்தவுடனேயே எழில்மதியின் இசைப் பயிற்சியும் தீவிரமாக ஆரம்பம் ஆகியது. கொஞ்ச நாட்களாக 'டச்' இல்லாததால் பயிற்சியிலே குறைபாடு இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. காலை மாலை தவறுமல பாட்டு வாத்தியாரிடம் சிக்ஷை பெற்றாள். எழில்மதியின் அப்பா மெய்யப்பர் அவளை ஊருக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்ற எண்ணத்தில் வந்தவர் அவளது இசை ஆர்வத்தைக் கண்டு நீ விடுமுறைக்கு ஊருக்கு வர வேண்டாம். அங்கே வந்துதான் என்ன செய்யப் போறே...இங்கேயே இருந்தாலும் தினமும் பயிற்சு பெறலாம" என்று சொல்லிவிட்டார்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த மெய்யப்பர் வீணை வாசித்துக் கொண்டிருந்த மகளை நோக்கி "ஏம்மா...,நீ பக்கத்துத் தெரு வக்

இல் மாமா மாதிரி கௌன் அணிந்து கொண்டு, தலையில் 'ஹீட்' குல்லாய் போட்டுக் கொண்டு சர்வகலாசாலைக் கட்டிடத்திலிருந்து பட்டம் பெற்று வருவதைக் காண வேண்டும் என்பது என் ஆசை. நான் சில சமயங்களில் பார்த்திருக்கின்றேன், பட்டம் பெற்று வரும் சில பெண்கள் பல்கலைக் கழகத்து மண்டபத்தை விட்டு வெளியே வரும் போதே கௌன் எல்லாவற்றையும் எடுத்துச் சுருட்டி கையில் வைத்துக் கொண்டே வந்துவிடுகிறார்கள். என்ன வெட்கமோ தெரியவில்லை நீ அது மாதிரி வந்து விடாதே! திருஷ்டி கழித்து போடத் தான் உன் அத்தை இருககே" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

"ஏம்பா...பட்டம் பெறப் போகும் போது ஏன்தான் இதை யெல்லாம் போட்டுக் கணும்..." என்றாள் அவள்.

"அந்தக் கருப்புச் சட்டை இருக்கிறதே— அதை முன்பெல்லாம் 'அல்பாக்கா' என்ற துணியில் தைக்கிறது வழக்கம். தென் அமெரிக்காவில் 'அல்பாக்கா' என்று ஒட்டகம் மாதிரி ஒரு சிறிய பிராணி இருக்கிறது. அதன் ரோமம் கம்பளி ரோமம் தான். ஆனால் அது பட்டுப் போல நைசாக இருக்கும். அதில்தான் நெய்து கொள்வார்கள். வெள்ளைக்காரர்கள் கறுப்பு உடையைத் தங்கள் துக்கம் கொண்டாடுவதைக் காண்பிப்பதற்காகத் தரிப்பது வழக்கம். பட்டம் பெறும் போது எதற்காக அணிகிறார்களோ தெரியவில்லை; நாமும் கண்ணை மூடிக் கொண்டு பின் பற்றுகிறோம்" என்றார்.

"அப்பா...இப்படி இருக்குமோ என்னமோ, நாங்கள் பட்டம் பெற்று விட்டோம், வேலை கிடைக்கும் வரை எங்கள் வாழ்க்கை துக்கமயம்தான் என்பதைக் காட்டதான் அணிகிறார்கள். அப்படி இருக்கலாமோ?"

மகளின் விளக்கத்தைக் கேட்டதும் மெய்யப்பர் வாய் விட்டுச் சிரித்து விட்டார். "ஓ! ஓ! இருக்கலாம் அம்மா....நீ சொல்ற காரணமும் தான் நடைமுறைககு ஒத்து வருதே" என்று சொல்லிக் கொண்டே கையை அலம்பி விட்டுத் திண்ணையில் வந்து படுக்கையில் சாய்ந்தார்.

தன்னைப் பட்டதாரி ஆக்கிப் பார்ப்பதில் தந்தையாருக்குள்ள கொள்ளை ஆசையை நினைத்துப் பூரித்தாள் எழில்மதி.

டவுனுக்குப் போய்விட்டுத் தனது வில் வண்டியில் வந்திறங்கிய பாட்டு வாத்தியார் வண்டிக்காரனைக் கூப்பிட்டு "டேய், மாட்டுக்குத் தீனிவைத்துத் தண்ணீர் காட்டு" என்று கூறிவிட்டு உள்ளே சென்று அங்கவஸ்திரத்தை எல்லாம் கழற்றி மாட்டி விட்டு நேராக மெய்யப்பரிடம் வந்தார். மெய்யப்பருக்குப் பட்டு வாத்தியாரைக் கண்டு விட்டால் பொடி போடும் நினைவு வந்து விடும். 'காரம், குணம், மணம் நிறைந்த' பொடி டப்பாவை மெய்யப்பரிடம் நீட்டிக்கொண்டே "பிள்ளைவாள், நாளைக்கு உப்பிலியப்பன் கோயிலிலே நம்ம கச்சேரி இருக்கு நம்ம நாச்சியார் கோயில் ராகவன் பிள்ளைக்கு உடம்பு சுகமில்லே. அதனாலே மிருதங்கத்துக்கு வேறு யாரையாவது ஏற்பாடு செய்யணுமேண்ணு டவுனுக்குப் போனேன். என்று கூறிக் கொண்டே பாயில் உட்கார்ந்தார்.

மேல் துண்டை எடுத்து சுழற்றி முதுகு மார்பை எல்லாம் துடைத்துக் கொண்டே "ஏன் .... கிராம்பு போட்டுக்குங்கோ! என்று தன் ஜெர்மன் சில்வர் பெட்டியை மெய்யப்பரிடம் கொடுத்தார். கொழுந்து வெற்றிலை, களிப்பாக்கு, உயர்ந்த ஜாதி ஏலக்காய், கிராம்பு குங்குமப்பூ எல்லாம் பட்டு வாத்தியாரின் கைப் பெட்டிக்குள் எந்நேரமும் இருக்கும். பெட்டியைத் திறந்து கிராம்பை எடுத்து இரண்டாக முறித்து வாயில் போட்டுக் கொண்டு "நமம குழந்தைக்கு முன்னேற்றம் எப்படி இருக்கு .... ஏதாவது தேருமா?" என்றார்.

"அதென்ன அப்படிக் கேட்டுட்டீங்க ... பிற்காலத்திலே அவளுக்குச் சங்கீத உலகததிலே எத்தனை கியாதி இருக்கப்போவுதுண்ணு பாருங்க. துல்லியமான சுருதி, ஸ்வர நிர்ணய நுணுக்கம், கனம் நயம் எல்லாம் தெள்ளெனத் துலங்கும்படி வாசிக்கிறாள். மூன்று ஸ்தாயிகளிலும், காலங்களிலும, புஷ்டியாய், மழ மழப்பாய் வீணையை மீட்டுகிறாள். மனிதசாரீரத்தின் உதவுபடிகளும், அமைந்திருக்க வேண்டிய பேச்சுக்களும் வாத்தியத்தில் அமைக்கணும்ணு, வீணைப்பயிற்சிக்கு முன்னே வாய்ப்பாட்டுத் திறமை அவசியம். நம்ம

கொழுந்தைக்கு இயற்கையிலே அதா வரப்பிர சாதமா யிருக்கு ... .... விச்ராந்தி இல்லாமல், வேகமான காலத்தில், பாடுவதால் கமகங்கள் நசிந்து ஸ்வரங்கள் ஜீவனில்லாமல் உருமாறிப் போய்விடும். அத்தகைய விவாகரமே இவ கிட்டே இல்லே.... இவ கிட்டே உள்ள ஒரு முக்கியமான அமசம் என்னண்ணு, ஜிலு ஜிலுப்பும், பூரிப்பும் உள்ள ஒரு வித கம்மல் சாரீரத்தின் பின்னணியில் எபபோதும் தயாராக நின்று கொண்டிருக்கும் மேல் ஸ்தாயி சஞ்சாரத்தில் நீண்ட கார்வைகள் பிரயோக மாகும் காலங்களில் ஜீவனோடு அக்கம்மல்,சுருதியைக் கவ்விக் கொள்கிறது. அதற்கு நிகர் அதுதான் என்று நீளப் பேசி முடித்தார் பட்டு வாத்தியார்.

அவர் தன் பேச்சிலே பிரயோகித்த அத்தனை சொற்களுக்கும் பொருள் புரிந்தோ என்னவோ, மொத்தத்தில் பாகவதர் மகளின் பாட்டுத் திறமையைப் பாராட்டிக் கூறுகிறார் என்று மட்டும் புரிந்து விட்டது மெய்யப் பருக்கு.

''பிள்ளைவாள்.... இன்னும் இரண்டு மாதத் திற்குள்ளேயே இதே சுவாமி மலைக் கோயிலே நம்மக் குழந்தைக்கு அரங்கேற்றம் நடத்திடுங்கோ.... என்ன சரிதானே'' என்றார்.

“அதற்கென்ன பாகவதர்வாள்.... நீங்கள் சொல்லிட்டா எனக்கு அட்டியில்லை'' என்றார்.

“நான் அந்தக் காலத்திலே....சின்ன வயசிலே, திருக்கோடிக் காவல் சாமா சாஸ்திரி.... திருவிச நல்லூர் சங்கீத கலாநிதி, பிலஹரி பூஷணம், சுந்தரையா எல்லார் கிட்டேயும் குருகுல வாசம் செய்திருக்கேன். அப்ப எனக்கு சங்கீதத்திலே எல்லையில்லாத பிரேமை. நல்ல வித்துவான்னு எனக்குப் பட்டுட்டா நான் அவர்களை விடுவதில்லை. அப்படி எல்லாம் கத்துகிட்ட கலை இது. இந்தக் காலத்திலே எவனுக்குப் பிள்ளைவாள் சங்கீத ஞானம இருக்கு. இப்பமக்கள் தெருக்கூத்துப் பாட்டையும, டப்பாங்குத்து கத்தலையும் தானே ரசிககிறாங்க''

இதைக்கேட்ட மெய்யப்பர்'' காலத்துக்கு ஏற்ப மக்களின் ரசனை மாறிட்டு இருக்கு... நாமும் மாறவேண்டியதுதான்'' என்றார்.

“இன்னும் கொஞ்ச காலத்லே சங்கீதக் கலையே அழிஞ்சிடும் பாருங்க. ஏதோ அங்கொருத்தர் இங்கொருத்தர் என்னைப் போலச் சம்பிரதாயத்தை விட்டுக்கொடுக்காமல் நடத்திண்டிருப்பா...நம்ம குழந்தைமாதிரி ஒருத்த ரெண்டு பேரு அந்தக் கலையை எப்படியோ அழியாமல் காப்பாற்றினா அது போதும்!'' என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தார். பின் கலை என்று இளம்பி, நடுவிலே மற்றொன்றில்தாவி, வேறொன்றைத் தழுவி, தழுவியதை எல்லாம் கலை என்று சாதித்து, எது எதுக்கோ எழுந்த ஆரவாரத்தை எல்லாம் கலையின் வெற்றி என்று கருதிக் கொண்டு என்னை நானே ஏமாற்றிக்கொள்ள விரும்பலே... பிடிவாதக் காரண்ணு நெனைச்சாலும் நெனைக்கட்டும்'' என்றார்.

பட்டு வாத்தியாரின் பேச்சில் உண்மையின் விளக்கமும், நிராசையின் நிழலும் கலந்திருந்தது. சிலருக்குத் தம்முடைய லட்சியத்தில் தோல்வி தட்டிவிடுகிற போது அந்த லட்சியத்தையே காலடியில் போட்டு நசுக்கி விடத்தோன்றும் அப்படிப்பட்ட உணர்வு தான் பட்டுவாத்தியாரின் பேச்சில் தொனித்தது.

பட்டுவாத்தியாருக்குப் பேச ஆரம்பித்து விட்டால் எல்லாமே மறந்துவிடும். அவரது மனைவி எதிர்வீட்டில் நின்று கொண்டு 'இன்னும் சாப்பிடலியா?'' என்று குரல் கொடுத்த பிறகுதான் சாப்பிட வேண்டும் என்ற உணர்வு பெற்றவராய்த் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு தன் ஜெர்மன் சில்வர் பெட்டி சகிதமாக வீட்டுக்குச் சென்றார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மெய்யப்பர் எழில்மதியின் அரங்கேற்றத்திற்கான ஏற்பாடு களைச் செய்து விட்டு, நாளையும் இன்னதெனக் குறித்து விட்டு, மங்க நல்லூருக்குச் சென்றார்.

விடுமுறை துவங்கி ஒரு வாரத்திற்கு மேலாகியும், எழில்மதி நந்தனைச் சந்திக்க முடியவில்லை. அத்தையிடம் சொல்லிக் கொண்டு இரண்டொரு முறை காந்தி நகரில் உள்ள வசந்தியின் வீட்டுக்குப் போய்வந்தாள். கும்பகோணம் போனால் எப்படியும் நந்தனைச் சந்திக்க முடியும் என்று அவள் எண்ணினாள். ஆனால் இரண்டு மூன்று தடவையும் அந்த வாய்ப்பு அவளுக்குக் கிட்டவே இல்லை.

கொஞ்ச நாட்களுக்கு முன் இளங்கோவிடம் இருந்து வந்த கடிதத்தைக் கண்டது

முதல் அவள் ஓரளவு குழம்பிப் போய் இருந்தாள். இளங்கோவின் உள்ளத்தில் சலனம் ஏற்படுவதற்குத்தான் காரணமாக இருக்கிறோமே என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள். ஆனாலும் அதைத் தவிர்த்துக் கொள்ளும் வழி அவளுக்கு என்ன என்று புலப்படவே இல்லை. கவிஞன், நல்ல கலை உள்ளம் படைத்தவன் என்ற வகையில்தான் கொண்டிருந்த மதிப்பைக் கொஞ்சமும் குறைக்காமல், அவனைப் பற்றி தாழ்வாக மதிப்பிடும் செய்யாமல் அவனுடைய நிலைக்காக அவள் அனுதாபமே கொண்டாள். அவனது கடிதத்தின் மூலம் அவனது நெஞ்சப் பாங்கையும், அன்பையும் உணர்ந்து கொண்டாலும், அதைத் திரும்பிக் காட்ட இயலாத அளவுக்குத் தனக்கு வரம்பு கட்டிக் கொண்டாள். இந்த நிலையில்தான் இளங்கோவுக்குப் பதில் எழுதுவது தன் பெண்மைக்கு மாறுபட்ட செயல் என்றும், இப்படிக் கண்டும் காணுமல் வாளா இருநதது விடுவதே காலப் போககில் அவன் தன் உள்ளத்தை மாற்றிக் கொள்ள வழி செய்யும் என்று நம்பியும் அவள் சும்மா இருந்து விட்டாள். நந்தனிடம் இந்தச் செய்தியைக் கூறிவிடலாமோ என்று ஒரு கணம் எண்ணிப் பார்த்தாள். அப்படிச் சொல்வதின் மூலம் அவர்கள் இருவருடைய நட்பு கெடும் என்று முடிவுக்கு வந்தாள். இறுதியில் யாருடைய அன்பு நமக்கு வேண்டுமோ அவர்களிடம் நமது ரகசியததைச் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது. ஹார்டியின் டெஸ் அந்தத் தவற்றைச் செய்து விட்டுத்தான் தன் பததிற்கு ஆளானள். நாமும் அதே தவறைச் செய்துவிட வேண்டாம் என்று முடிவுக்கு வந்தவளாக அந்தக் கடிதத்தை முற்றிலும் மறந்து விட்டவள் போலத் தன்னை ஆக்கிக் கொண்டாள்.

சுவாமி மலைக் கோயிலில் திருவிழா தொடங்கி இருந்தது. அன்று சித்திரா பௌர்ணமி. பக்தர்கள் காலைமுதலே காவடி எடுக்கத் தொடங்கி இருந்தனர். ஊரில் ஒரே ஆரவாரமும் மகிழ்ச்சிக் கூச்சலும் நிறைந்திருந்தன.

"புள்ளிக் கலாபமயில் பாகன்—சக்தி
புதல்வ னுளகன யோகன்—மலை
போலத் தான் திரண்டு
கோலப் பன்னிரண்டு வாகன்—நல்
விவேகன்
வள்ளிக் கிசைந்தமுரு கேசன்!"

என்ற காவடிச் சிந்துப் பாட்டுக்கள் தெருவில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. நல்ல வெயிலையும் கூடப் பொருட்படுத்தாமல் திரண்டு வந்த மக்கள் கூட்டம் கடை கண்ணிகளைச் சுற்றிக் கொண்டு இருந்தன. மாலை நேரம் ஆக ஆகக் கூட்டமே தாங்க முடியவில்லை. எங்கு பார்த்தாலும் கியாஸ் லைட்டுகளும், கடைக்குக் கடை பெரிய பெரிய மண்ணெண்ணெய் விளக்குகளும் சேர்ந்து ஊரே பெரிய தீபாலங்காரத்துடன் ஒளி வெள்ளமாய்க் காட்சி தந்தது. மண்டபங்களிலும், திருக்குளத்தின் படித்துறையிலும், பந்தலிலும் அங்கும் இங்குமாக அமர்ந்து மக்கள் அன்றைய தினத்து முக்கிய நிகழ்ச்சியான நாதஸ்வரக் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருநதனர்.

விளக்கு வைக்கிற நேரம். எழில்மதியின் அத்தை, பட்டு வாத்தியாரின் தாய், குழந்தை குட்டிகள் எலலோரும் கோயிலுக்குச் சென்றிருந்தனர். எழில்மதி மட்டும வீட்டில் இருந்தாள். சந்திரனின் ஒளி ரேகைகள் உள்முற்றத்தில் விழுநது வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தன. வெளிக்கதவைத் தாழ் போட்டு விட்டு உட்கூடத்தில் ஜன்னலில் உட்கார்ந்து, கம்பிகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு இருந்தாள் அவள்.

தலைவி ஒருத்தி "செந்தீயின் சாற்றைப் பிழிந்து சந்தனம் என்று கூறி என் மீது யாரோ தடவி விட்டார்களே! நந்தி மன்னனின் மார்பை அடையப் பெறுமல் உள்ளம் வெந்து கொண்டிருக்கிற என்மீது இப்படிச் செய்து விட்டார்களே!" என்று அரற்றுவதாக நந்திக் கலம்பகத்திலே பாட்டு ஒன்று உண்டு. எப்பொழுதோ படித்த அந்தப் பாட்டு எழில்மதிக்கு நினைவில் வந்தது. நந்தியைக் காணுமல் தவித்த அந்தத் தலைவியைப் போல இவளும் நந்தனைக் காணப் பெறுமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)

ஊருக்கு நல்லது சொல்ல

# புயல்

தேசிய முற்போக்கு வார இதழ்

விரைவில் வெளிவருகிறது

ஏஜென்சி, சந்தா விபரங்களுக்கு

'புயல்' 33, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

Published by Sakunthala Krishnan, 27, Rajagopal Naicken St., Chintadripet, Madras-2, Printed by R. Ravi at Sudar Printers, 33, Jones Street, Madras-1. Acting Editor: Sakunthalakrishnan, Founder: Kannikannan